# பூவரசு

* POOVARASU *



ஐப்பசி 1995
October `95

உள்ளே.....

மதுரகவி வி.கந்தவனம் அவர்களுடன் ஒரு சந்திப்பு!

# „MUKONA"-Projekt sorgt für Theater in der Grundschule!

**Tenever** (til). **Eine ganze Schule spielt Theater: Fast 300 Kinder der Grundschule am Pfälzer Weg, die gesamte Lehrerschaft und hilfsbereite Eltern arbeiten gemeinsam an den Vorbereitungen für die am Freitag stattfindende Aufführung des Theaterstücks „MUKONA", mit der an der Grundschule eine außergewöhnliche Projektwoche ihren abschließenden Höhepunkt findet.**

Masken entwerfen und herstellen, Kostüme nähen, Dekorationen für das Bühnenbild bauen – Die Kinder und Lehrer haben alle Hände voll zu tun. Rollen werden verteilt und einstudiert, technische Voraussetzungen für Licht und Ton geschaffen und sogar ein Orchester ins Leben gerufen, um das Theaterstück musikalisch zu begleiten. Ehrensache, daß dabei auch selbst hergestellte Instrumente zum Einsatz kommen werden.

Neben dem Spaß an der Sache gibt es für die Kinder am Pfälzer Weg einiges von- und übereinander zu lernen, sind doch zwei Drittel der Schüler Aussiedlerkinder oder ausländischer Herkunft. Daß die sechs- bis zehnjährigen im Rahmen des Theaterprojekts begeistert an einem Strang ziehen, ist durchaus im Sinne des Erfinders: Die Auseinandersetzung mit dem Fremden und das gegenseitige Entdecken sind zwei zentrale Motive des Theaterstücks, das nach einer Geschichte des tamilischen Schriftstellers Sinniah Maheswaran entstand und 1992 auf der Breminale uraufgeführt wurde.

Das Theaterspektakel entsteht unter der Leitung des Vereins zur Förderung der kulturellen Breitenarbeit, in dem sich verschiedene Kulturbüros zusammengeschlossen haben. Neben der organisatorischen Unterstützung gibt der Verein theaterpädagogische Anleitung und musikalische Betreuung durch einen Musikdozenten und Studenten der



பங்குகொண்ட 300 பாடசாலைச் சிறுவர்களில் ஒரு பகுதியினர் ஒத்திகையில் ஈடுபட்டபோது!

29.09.95ல்
சின்னையா மகேஸ்வரனின்
'முக்கோணா'
வெளியரங்க நாடகம்
மறுபடி அரங்கேறிற்று!

நன்றி Weser Report 27.09.97

# பூவரசு

இனிய தமிழ் ஏடு

**ஐப்பசி: 1995**
**இதழ்: 33**

**POOVARASU**
**Tamilische Kultur Magazin**

**"POOVARASU"**
**Sinniah Maheswaran,**
**Otto Brenner Allee 56,**
**28325 Bremen,**
**Germany.**

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம் சொந்தம்.

உள்ளே —

**கவிஞர் வி.கந்தவனம்**
**குலமதி கலாதரன்**
**வீ.ஆர்.வரதராஜா**
**தோமாஸ் வெல்**
**எழிலன்**
**வேலணையூர் பொன்னண்ணா**
**ராஜன்,ஸ்**
**கோசல்யா சொர்ணலிங்கம்**
**சீ.அருணாசலம்**
**என்.சரோஜினி**
**ஸ்ரீதாஸ்**

பூவரசு
இனிய தமிழ் ஏடு
5வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும்

# சிறுகதை கவிதை கட்டுரைப்போட்டிகள்!

## 1. சிறுகதை.

கதைக்கான கரு எதைப்பற்றியதாகவும் இருக்கலாம்.
பூவரசு இனிய தமிழ் ஏட்டில் 6பக்கங்களுக்குள் அடங்கத் தக்கதாகவும்,சொந்தப்படைப்பாகவும், இதுவரை பிரசுரமாகாததாகவும், மொழிபெயர்ப்பாகவோ தழுவலாகவோ இல்லாததாகவும் கதைகள் அமையவேண்டும்.

## 2. கவிதை.

"புலம்பெயர்ந்து வந்ததனால்..."
இந்தத் தலைப்பில் கவிதைகள் வரையப்படவேண்டும்.
பூவரசு இனிய தமிழ் ஏட்டில் 2பக்கங்களுக்குள் அடங்கத் தக்கதாக கவிதைகள் இருத்தல்வேண்டும்.

## 3. கட்டுரை.

நீங்கள் விரும்பும் ஒரு தலைப்பின்கீழ் கட்டுரைகள் வரையப்படலாம். புலம்பெயர் நம்மவர்வாழ்வின்நிலைபற்றி கட்டுரைகள் வரையப்படுவது விரும்பத்தக்கது.
கட்டுரை பூவரசு இனிய தமிழ் ஏட்டில் 5 பக்கங்களுக்குள் அடங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

போட்டிகளுக்கான பொது விதிகள்.
1.போட்டிகளில் கலந்து கொள்ள வயதெல்லை இல்லை.
2.ஆக்கங்கள் தாளின் ஒருபுறமாக மட்டும் தெளிவான எழுத்தில் அல்லது தட்டெழுத்தில் எழுதப்படவேண்டும்.
3.போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவத்தில்மட்டுமே ஆக்கதாரரின் பெயர் முகவரி என்பன எழுதப்படவேண்டும்.
(ஆக்கங்களின்மீது ஆக்கதாரரின் பெயர் முகவரி என்பவற்றை எழுத வேண்டாம்.)

**போட்டிகளுக்கான இறுதித் திகதி 31.10.1995 ஆகும்.**

(எக்காரணத்தை முன்னிட்டும் போட்டிகளுக்கான முடிவுத்திகதி நீடிக்கப்பட மாட்டாது என்பதைத்தயவுசெய்து கவனியுங்கள்)

# எங்கள் இளந்தளிர்களே



அன்புச் செல்வங்களே!
எங்கள் பூவரசு இனிய தமிழ் ஏடு தனது ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி எங்கள் இளந்தளிர்களான உங்களுக்கிடையே நடாத்தும் போட்டிகள்பற்றி சென்ற இதழில் அறிவித்திருந்தோம். விண்ணப்பப் படிவங்களும் இணைக்கப்பட்டிருந்தன. போட்டிகளுக்கான முடிவுத்திகதி 30.11.95 என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதுதானே? குறிப்பிட்ட முடிவு திகதிக்குள் போட்டிகளுக்கான உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.



# கையெழுத்துப் பிரதிகள் 1985-1995
# சிறப்பிதழ்.

இந்தப் பத்தாண்டுகால இடைவெளியில்
புலம் பெயர் நாடுகளில் வெளியான தமிழ்
கையெழுத்துப் பிரதிகளிலிருந்து சிறந்த
ஆக்கங்களைத் தொகுத்து
பூவரசு வெளியிடவிருக்கும் சிறப்பிதழுக்கு
கையெழுத்துப்பிரதிகளில் எழுதிய
படைப்பாளர்களிடமிருந்தும்
வெளியீட்டாளர்களிடமிருந்தும்
ஆக்கங்களை வரவேற்கிறோம்.
வாசகர்களும்
தாங்கள் படித்த கையெழுத்துப் பிரதிகளிலிருந்து
சிறந்த ஆக்கங்களைத் தெரிவுசெய்து
அனுப்பலாம்.
இதுவரை வெளிவந்த
கையெழுத்துப்பிரதிகளில்(சஞ்சிகைகளில்)
உங்களுக்குப்பிடித்த ஆக்கத்தின்மீது
புள்ளடியிட்டு
குறிப்பிட்ட அந்தச்சஞ்சிகையையும் இணைத்து
பூவரசு முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
இயலுமெனில் அந்தச் சஞ்சிகைபற்றிய குறிப்புக்களையும்
(வெளிவந்தகாலம், வெளியீட்டாளர், நோக்கங்கள்பற்றியவை)
இணைத்து அனுப்பலாம்.

Poovarasu
Sinniah Maheswaran
Otto Brenner Allee 56
28325 Bremen
Germany.

- குலமதி கலாதரன்.

# வேறொரு மன்னன் மங்கை ஆயினும் அண்ணன் தங்கை இவள்

அப்போது நேரம் நான்கு மணியை நெருங்கிக்கொண்டிருந்தது. நான்குமணிக்கு வெளியாட்கள் நோயாளரைப் பார்வையிடும் நேரமாதலால் ஒவ்வொரு நோயாளியிலும் புதுத்தென்பு தெரிவதுபோல் இருந்தது.
ரம்யாவின் வார்டில் எல்லோரும் கற்பிணிப்பெண்கள்தான். இதுவரை முனகியவர்கள், அழுதவர்கள் எல்லோரும் ஆவலோடு யன்னலினூடு வாசலை நோக்கியவாறு இருந்தனர் — தம் வேதனைகள் முனகல்களை உற்றார் உறவினரிடம் கொட்டித்தீர்ப்பதற்கு.
ரம்யாவும் நிறைமாதக்கற்பிணிதான். ஆனால் தன் வேதனைகளை தன்னுள்ளேயே அடக்கிப் பழகிக்கொண்டவள். பணக்காரக் கணவனைக் காதலித்து கலியாணம் செய்த உடனேயே வேதனைகளைத் தன்னுள் அடக்கப்பழகிக்கொண்டாள் ரம்யா.

வெளியாட்கள் உள்ளே நுழைவதற்கு அனுமதியாக மணி ஒலித்தது. சிலநிமிடங்களுக்கெல்லாம் சலசல சத்தத்துடன் பெண்கள்,ஆண்கள்,குழந்தைகள் என்று பலதரப்பட்டவர்கள் கையில் பொட்டலங்களுடனும் இல்லாதவர்களுமாக உள்ளே நுழைந்தார்கள்.
இப்போ அவள் கணவன் அர்ஜுன் இங்கிருந்திருந்தால் ஓடி வந்திருக்க மாட்டானா...? இப்போது ஓடி வருவதற்கு அவளது பணக்கார மாமி, மச்சாள் துடிப்பார்களா... என்ன?
'அவர்களெல்லாம் ஏன்? இதோ நான் இருக்கிறேனே!' என்று கூறுவதுபோல "அம்மா!"என்று கூவிக்கொண்டு ஓடிவந்த அவளது ஐந்துவயது மகன் அஜய் தாவி கட்டிலில் ஏறினான். அவனின் பிடிவாதத்தால் அவனுடன் வந்த அவள் மாமியார் முகத்தைச் சுளித்தபடி வாசலிலேயே நின்றாள்.
"அம்மா...அம்மா....தங்கச்சிப்பாப்பா வெளில வரல்லியாம்மா?... ஏம்மா இன்னம் வரலை? எப்பம்மா தங்கச்சி வருவா? என்று சிணுங்க ஆரம்பித்தவனுக்கு,
"வேண்டாம் அஜய்... உனக்கும் ஒரு தங்கை பிறந்து நீங்களும் அண்ணன் தங்கை பாசத்திற்குக்கட்டுப்பட்டு வேதனைப்படவேண்டாமடா... என் அண்ணன் பட்ட பாட்டை உனக்கு சொன்னா புரியாதடா! உனக்கு தம்பியே பிறக்கட்டும்." என்று வேதனையுடன் தாய் கூறியதைக் கேட்ட அஜய்க்கு எதுவும் புரியாமல் விட்டாலும், 'எனக்கு தங்கச்சிதான் வேணும்' என்று அடம்பிடித்த அஜயைப்பார்க்க பாட்டிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"உன் பாசமலர்கதைஎல்லாம் குழந்தைக்குப்புரியுமா? அதை உன் அண்ணனிடம் சொல்!" என்றவள் அஜயின் கையைப் பற்றித் தரதரவென இழுத்துக் கொண்டு வெளியேறினாள்.
ரம்யாவிற்கு இது ஒன்றும் புதிதல்ல.வேதனையுடன் கண்களைமூடி தன்னைத் தானே சமாதானப்படுத்த முயன்றவளின் நினைவில் அவளது கடந்த காலம் நிழல்போல் ஓடியது.

ரம்யாவின் மூன்றாவது வயதிலேயே அவள் அப்பா இறந்துவிட்டார். அப்போது அவள் அண்ணன் ராகவனுக்கு பத்துவயதுதான். அவர்களுக்கு சொத்து என்று இருந்ததே ஒரு சிறிய வீடுமட்டும்தான். பணம் என்று சேர்த்து வைக்க அவள் அப்பாஒன்றும் பெரியஅரசாங்கவேலை எதுவும் செய்யவில்லை. 'கராஜ்'ஒன்றில் 'மெக்கானிக்காக வேலைபார்த்தவர்தான். இவர்களின் குடும்ப நிலையை உத்தேசித்து ராகவன் 'கராஜில் வேலை கேட்டபோது, அவனது ஒழுக்கம், பண்பு எல்லாவற்றையும் முன்பே அறிந்த முதலாளி உடனே ஒப்புக்கொண்டார். ராகவனின் தாயோ 'வேண்டாம்டா ராகவா! நீ படிக்கக்கூடிய பிள்ளை. படிப்பை விட்டிடாதே! நான் ஏதாவது வேலை செய்து உங்களைக் காப்பாற்றுவேண்டா!' என்று எவ்வளவோ தடுத்துச்சொன்னாள்.
ஆனால் ராகவனோ, 'வேண்டாம்மா.நீங்க ஒரு வேலைக்கும் போகவேண்டாம். நான் படிக்கமுடியாம போனா என்ன? என் தங்கச்சியை படிக்கவைப்பேனம்மா! அவள் கஸ்ரப்படக் கூடாது!' என்று அந்தச் சின்னவயதிலேயே 'ரம்யா ரம்யா' என்று தங்கைமேல் பாசத்தைக் கொட்ட ஆரம்பித்தான்.

ரம்யா பள்ளிக் கூடம் செல்ல ஆரம்பித்தபோது தானே அவளைப் பள்ளிக்கூடம் கொண்டுபோய்விடுவான். யார்வீட்டிற்கும் அவளை விளையாட அனுப்பமாட்டான். யாராவது தங்கையை அடித்துவிடுவார்களோ விழுத்தி விடுவார்களோ என்றபயம். அவன் அம்மாகூட பேசுவாள். 'டேய்... அவளும் எல்லாம் பழகணும்டா...அவளை விடுடா!' என்றால், 'வேண்டாம்மா...அவகூட வேலையால் வந்து நான் விளையாடுவேன்!' என்பான். அந்தச் சிறுவயதிலேயே ஆரம்பித்த பழக்கம்.... ரம்யா வளர்ந்து இப்போ இருபதுவயது கன்னிப் பெண்ணான போதும் 'ரம்யா அப்படிச்செய்யாதே! இப்படிச்செய்யாதே!' என்றெல்லாம் சொல்லும்போது, 'அண்ணா! நான் என்ன சின்னக்குழந்தையா?' என்று குலுங்கக் குலுங்கச் சிரிப்பாள். இப்போதெல்லாம் ராகவன் வேலைக்குப் போகும்போது 'ரம்யா.. வாம்மா... நான் ரெடி!' என்றதும்,'நானும் ரெடியண்ணா!' என்று துள்ளிக்குதித்துஓடிவருவாள்.இருவரும் ஒன்றாகசென்று சந்தியொன்றில் பிரிந்து ராகவன் கராஜிற்குப்போக ரம்யா சிநேகிதி ஒருத்தியுடன் பள்ளிக்கூடம் செல்வாள்.

சந்தியில் பிரிந்துசெல்லும் தங்கையையே சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருப்பான் ராகவன். சிவந்தநிறமும் சிறிய கூர்மையானமூக்கும், அகன்ற பெரிய கண்களும், எப்போதும் புன்னகைப்பதுபோன்ற உதடும், கருமையான நீண்டமுடியும், அதைப் பின்னிவிட்டு அவள் நடைக்கு ஏற்றாற்போல் அங்கும் இங்குமாய் அலைபாயும் அழகும், தன் கண்களே தங்கைமீது பட்டுவிடுமோ என்று ராகவனுக்கு பல தடவை நினைப்பு வருவதுமுண்டு.
ராகவன் மட்டும் அழகில்லையா என்ன?
அவனும் சிவந்த நிறமும், கூர்மையான மூக்கும், சுருண்ட அடர்ந்த முடியும் எடுப்பான உடல்வாகும் கொண்டவன்தான். ஆனால் அவன் செய்யும்

வேலையால் அவன் தன்னை மெருகேற்றிக் கொள்வதில்லை.
ராகவனின் பாசத்தை கண்டு ஊரே வியப்பதுண்டு.
'ராகவா! உன்தங்கைமேல் அளவுக்கு அதிகமா பாசத்தைக் கொட்டாதே!..ஒரு காலத்தில் கலியாணமாகி புருசனோடை போறவதானே!' என்றால், 'ஏன் கலியாணமானா பாசம் குறைஞ்சிடுமா? தினமும் நான் அவளை பார்க்கக் கூடியதாக ஊருக்குள்ளேயே மாப்பிள்ளை எடுப்பேன்!' என்று சிரிப்பான் ராகவன்.
'ஏனண்ணா...கலியாணமே செய்யாம இப்படியே இருந்திட்டா..?' என்று சிரிப்பாள் ரம்யா. 'கடவுளே இவர்கள் எப்பவும் இப்படியே பாசத்துடன் இருக்கனும்!' என்று மனசாரக் கடவுளை வேண்டுவாள் தாய் பாக்கியம்.

அம்மாவின் அணைப்பிலும், அண்ணனின் பாசத்திலும், அதுவே உலகம்போல் வளர்ந்தவளுக்கு காதல் என்ற ஒன்றும் உண்டு என்று உணர்த்த ஆரம்பித்தான் அர்ஜுன்.
அர்ஜுன், ரம்யாகூட படிக்கும் அகல்யாவின் அண்ணன்தான். அகல்யா வகுப்பிலேயே தான் பணக்காரி என்ற அகங்காரம் கொண்டிருப்பாள். யாருடனும் பேச மாட்டாள். அப்படிப் பேசினாலும் எடுத்தெறிந்தே பேசுவாள். அகல்யாகூட பேசுவதற்கு யாரும் விரும்பவும் மாட்டார்கள். பணக்காரரின் ஒட்டுமொத்தமான திமிரும் அவளிடம் இருந்தது. அகல்யாவைத் தினமும்பாடசாலைக்கு காரில் கூட்டிவரும் அர்ஜுனின் கண்களில் ரம்யா தென்பட்டாள். ஆடம்பரமான, செயற்கை அழகையே பெரும்பாலும் பணக்காரரிடம் கண்டு பழக்கப்பட்டவனை இயற்கையான அழகையுடைய ரம்யாவின் எளிமையான தோற்றம் மிகவும் கவர்ந்தது. 'கலியாணம் என்றால் ரம்யாவுடன்தான்!' என்ற தீர்மானத்துடன், தன் விருப்பத்தை யார்மூலம் ரம்யாவிடம் தெரிவிப்பது....? அகல்யாமூலம்...? கேட்கவே வேண்டாம்!" என்றுஎண்ணியவன், 'சரி நானே..நேரடியாகக் கேட்கலாம்!" என்று முடிவுசெய்தவனாய்,அகல்யாவை சீக்கிரமாய் பாடசாலையில் இறக்கிவிட்டு ரம்யாவின் பாதையை நோட்டம் விட ஆரம்பித்தான்.

ரம்யா அண்ணன் ராகவனை சந்தியில்விட்டுப் பிரிந்ததும் அவள் சிநேகிதி வசந்தியுடன் செல்வது வழமை என அறிந்தவன், அந்தப் பாதையோரமாக இருந்த வாசிகசாலையில் பத்திரிகை படிப்பதுபோல் பாசாங்கு செய்துவிட்டு காரையும் அங்கேயே நிறுத்திவிட்டு, ராகவன் பிரிந்ததும் ரம்யாவைத் தொடர ஆரம்பித்தான். ஓர்நாள் இருநாள் என்று தினமும் அவன் தொடர்வதைக்கண்டு ரம்யாவும்வசந்தியும் பயந்ததுபோலவே,ஓர்நாள் அவர்களை இடைமறித்த அர்ஜுன், 'ரம்யா... நான் சுத்திவளைத்துப் பேசவிரும்பவில்லை... நான் உங்களை மனப்பூர்வமாக விரும்புகிறேன்....விரும்பிறதென்றால் பொழுது போக்குக்கு காதலித்து கைவிடுபவன் நான் இல்லை.... உங்களைக் கலியாணம் செய்யவிரும்பறேன்....உங்கபதிலை நாளை இல்லைஇன்னும் ஓர்கிழமையானாலும் பரவாயில்லை... ஆனா... எனக்கு சாதகமானபதிலைத்தாங்க....!' என்று பேசி முடித்தவன் அந்த இடத்தைவிட்டு அகன்றதும் ரம்யாவின் நிலையைக் கேட்கவும் வேண்டுமா?
கைகால்கள் வெடவெடக்க, நெஞ்சு படபடக்க, வேர்த்து, அடி எடுத்துவைக்க முடியாது தவித்துநின்றவளை வசந்திதான் சாதாரணநிலைக்குக் கொண்டுவர முயன்றாள். 'ஏய் ரம்யா முதலில் நடவடி...ஒரே இடத்திலை நின்றா யாராவது ஏதாவது நினைப்பாங்க...இதெல்லாம் இந்தக்காலத்திலை புதுசா என்ன...? விரும்பிற ஆம்பிளை பொம்பிளையைக் கேட்பது சகஜம்தானே...விரும்பினா ஓம் என்று சொல்லு... விருப்பம் இல்லைன்னா உன் அண்ணாகிட்ட சொல்லலாம்...

ஆனா அகல்யாவின் அண்ணனாக இருந்தாலும் அர்ஜூன் நல்லவர் போல் தெரியுது... இனி உன் விருப்பம்!' என்றாள் வசந்தி...
மறுநாளும் அர்ஜூன் வந்தான்.
'என்ன வசந்தி உங்கபிரண்ட் என்ன சொல்லுறா?ஒருவேளை நான் பணக்காரன் அதுவும் அகல்யாவின் அண்ணன் என்று பயப்படலாம். ஆனால்... நான் அகல்யாமாதிரி இல்லை. நான் நினைச்சா எத்தனையோ பணக்காரப்பெண்களை பொழுதுபோக்குக்காகவே விரும்பலாம். ஆனா நான் அவங்களை விரும்பலை. காரணம் நான் விரும்புவது இந்த அமைதியும் அடக்கமும் உள்ள இயற்கை அழகைத்தான்...' — இப்படியே ரம்யாவின்மனத்தில் எழும் சந்தேகங்களை அறிந்து பதில் அளிப்பது போல் நாளுக்குநாள் பேசிப்பேசி ரம்யாவின் மனதில் சிறுகச்சிறுக இடம்பிடித்து கடைசியில் அவளதுமனதை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டான் அர்ஜூன்.

அன்று வேலையால் வீட்டிற்குவந்த அண்ணன் ராகவன் ரம்யாவிடம் ஓர் பார்சலைக் காட்டி, 'இது என்ன சொல் பார்ப்போம்!' என்றான். 'போ அண்ணா சின்னக் குழந்தைமாதிரி!' என்று சிணுங்கியவளிடம்...'அதுதான் நீ சின்னக் குழந்தை இல்லை என்று புரிந்தபடியால்தான் உன் கல்யாணத்திற்கு ஆரம்பமாக இந்தநகைகளை சீட்டுப்பணத்தில் வாங்கினேன்' என்று காட்டினான். அதில் இருசோடி காப்பும் ஒரு சங்கிலியும் இருந்தன. அண்ணனின் அன்பில் கண்கள் பனித்தது ரம்யாவிற்கு....'சரி சரி சாப்பிட வாங்கோ!' என்று அழைத்தாள் தாய் பாக்கியம். அவர்கள் இருவரும் சேர்ந்து சாப்பிட்ட கடைசிச்சாப்பாடு அது.

அடுத்தநாள் பள்ளிக்கூடத்திலிருந்து ரம்யா வரும்போதே ராகவன் வீட்டில் இருந்தான். வழமையில் ராகவன் வர இருண்டு போய்விடும்.
'ஏன் அண்ணா ஏதாவது சுகம்இல்லையா?வேலையால் சீக்கிரமே வந்திட்டியே?' என்ற ரம்யாவிடம் எதுவும்பேசாது,'அம்மா நான் வெளியிலபோயிட்டு வாரேம்மா!' என்று வெளியேறிய ராகவனைக்கண்ட ரம்யா, 'என்னம்மா நடந்தது? அண்ணா ஏம்மா என்னிடம்எதுவுமேபேசலை?'என்று பயமும்பதட்டமுமாக கேட்டவளுக்கு உன்னிடம்மட்டுமா...என்னிடமும் எதுவும்பேசல்லை...என்னநடந்துதோ யாருக்குத் தெரியும்...என் பிள்ளை இப்பிடி இருந்ததில்லையே!' என்று அங்கலாய்த்தாள்.
ரம்யாவின் குற்றமுள்ள மனம் குறுகுறுக்க ஆரம்பித்தது. 'ஒரு வேளை என் காதல்விசயம் ஏதாவது அண்ணா கேள்விப்பட்டாரா? ...கடவுளே! என்ன விபரீதமாகுமோ? என்று பயந்தபடியே அண்ணனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்க, நேரம் இரவு பன்னிரண்டாகியும் ராகவனைக் காணவில்லை. என்ன ஆச்சோ...எங்கே போனானோ...என்று தெரியவில்லையே!' என்று அழ ஆரம்பித்த அம்மாவின் அழுகையை அடக்குவதுபோல் வாசல் கேற் திறக்கும் சத்தம் கேட்டது. தலையைத் தொங்கப்போட்டபடியே வந்த ராகவன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தான்.
'ஏண்டா ராகவா... இவ்வளவு நேரம் எங்கே போனாய்? அப்படி என்ன அலுவல்?' என்று கேட்ட அம்மாவிடம், ' உன்மகளுக்கு கலியாணம் பேசு!' என்றான் அமைதியாக. 'என்ன?' என்று திடுக்கிட்ட பாக்கியம், 'ஏண்டா இந்த திடீர் முடிவு? இப்ப என்ன அவசரம்?' என்றாள். 'நான் அவசரப்படவில்லை அம்மா...உன் மகள் அவசரப்பட்டிட்டாள்...தான் வயதுக்குவந்தவள் என்பதை உணர்த்திட்டாள்...காதல் கண்றாவி என்று புகைய ஆரம்பித்து நெருப்பாகமுன்

அணைத்துவிடுவோம் என்றுதான் இந்த முடிவுக்கு வந்தேன். நீங்களும் என் முடிவை ஏற்பீங்க என்றுதான் நானே இந்த முடிவெடுத்தேன்!' என்றான்.

'அது சரி.யார் மாப்பிள்ளை? யாரைக்காதலித்தாள்?' என்ற பாக்கியத்திற்கு,'அவள் காதிலித்தவனேதான் மாப்பிள்ளை...இந்த ஊர் பெரிய பணக்காரரின் மகன்தான்!'

'என்ன?' என்று திடுக்கிட்ட பாக்கியம் பெரிய பணக்காரர் வீட்டு மகனா..? என்ன உளர்றே? அவங்க எங்களோட கலியாணம் பண்ண சம்மதிப்பாங்களா?'

'சம்மதிச்சிட்டாங்க...ஆனா ஒருநிபந்தனையோட! ஐந்துலட்சம் பணம்கொடுத்தால் சரி...!'

'என்ன ஐந்துலட்சமா? எங்கே போவே காசுக்கு...? அந்தப்பெடியன் என்ன சொன்னான்?'

'என்ன சொல்லுறது? மற்றப் பணக்காரரைப்போல் இல்லாமல் காதலித்தவளையே கலியாணம் செய்யுறேன்!' என்றானே போதாதா? காசுக்கும் வழி பண்ணிட்டேன்!' என்றான் அமைதியாக.



'என்னடா.. அடுத்தடுத்து புதிர் போடுறே? யார் தருவாங்க ஐந்து லட்சம்?'

தங்கராசாவின் மகளைச் செய்யுற மாப்பிள்ளைக்கு அவர் வெளிநாட்டிலை இருக்கிற மகன்மார் என்னசீதனம்கேட்டாலும் தருவினமாம்புறோக்கர் சொன்னார். தங்கராசாவிடம் கதைச்சன்...எல்லாம்சரி வந்திட்டுது...!' என்று ராகவன் கூறியதைக் கேட்ட பாக்கியம்,

'என்னடா சொல்லுறாய்? அந்தப் பெட்டைக்கு ஒரு காலும் ஒரு வையும் ஏலாதெல்லே?..நான் இதுக்கு சம்மதிக்க மாட்டன்!' என்று கத்தத்தொடங்கினாள் பாக்கியம்.

இதுவரை பயம்,பதட்டம்,தன்னில் உள்ள பிழைகள் எல்லாவற்றையும் அமுக்கிக் கொண்டிருந்த ரம்யா... 'அண்ணா!' என்று வெளியே வந்தாள்.

'அண்ணா என்னை மன்னிச்சிடண்ணா! இப்படியான ஒருநிலைக்கு உன்னைத் தள்ளும் என்காதல் என்று நான் நினைக்கவில்லை அண்ணா என்னை மன்னிச்சிடு... எனக்குக் கலியாணமே வேண்டாம்..!' என்று குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

'இப்ப அழுறியே...இதுக்கு முன்னாலை எங்கைபோச்சு உன் புத்தி? உன்மேலை உயிரையேவைச்சிருந்த அண்ணனுக்கு நல்லபலனைக்கொடுத்திட்டியே.. ஏன் அவனால உனக்கு நல்லமாப்பிள்ளைபார்க்கேலாது என்றா அந்தப் பணக்காரனை காதலிச்சாய்?' என்று தன் ஆத்திரம்தீர கத்திய பாக்கியத்தை இடைமறித்த ராகவன்,
'அம்மா...ஏம்மா கத்துறே? ஏதோ நடந்தது நடந்திட்டுது..நான் இதுவரை சொன்னவைகளை வாங்கிக்கொடுத்தவைகளைதான் ரம்யா விரும்பி ஏற்பாள்... ஆனா இப்போ அவளாக விரும்பிய ஒன்று இந்த மாப்பிள்ளை... என் உயிரைக் கொடுத்தாவது இந்தக்கலியாணத்தை நடத்தியே தீருவேன்...'என்று உறுதியாகக் கூறியதுபோலவே தங்கராசாவின் மகள் ஆனந்தியை மணந்துகொண்டு ரம்யாவின் கலியாணத்தையும் முடித்துவைத்தான்.

தன் தங்கையைப் பார்க்காமல் ராகவனால் இருக்கமுடியாது. அவளைப்பார்க்க அந்தப் பணக்கார வீட்டிற்கு அடிக்கடி போய்வந்த ராகவனை ரம்யாவின் மாமியார் ஜானகி, 'இந்தா தங்கச்சியை கலியாணம் கட்டிக் கொடுத்த சாட்டிலை பணக்காரகொண்டாட்டம் கொண்டாடலாம் என்று நினைக்காதை!... எங்களோடை கொண்டாடினா நீங்களும் எங்களுக்கு சமமாக வந்திடுவீங்களா என்ன? இன்றையோடை இங்கைவாறதை நிறுத்திடு!' என்றாள் கல்மனம் கொண்ட ஜானகி.
அன்றிலிருந்து ரம்யாவின் பிறந்த வீட்டிலிருந்து யாருமே வருவதில்லை. ஆனால், ரம்யாவால் தன் பிறந்த வீட்டுக்குப் போகாமல் இருக்க முடியவில்லை. இடையிடையே வீட்டிற்குப் போய்வந்தவளை,' என்ன ரம்யா...அடிக்கடி வீட்டிற்குப் போய் அவர்களது பணக்கஷ்டத்தை தீர்க்கிறியா? பாவம்தான் உன் வீட்டுக்காரார்கள்...அதற்காக எங்களை ஒட்டாண்டி ஆக்கிவிடாதே!' என்றாள்


1969ம் ஆண்டு முதன்முதலாக
இலங்கையின் தமிழ்இசைத்தட்டு தயாரித்த
ஈழத்து மெல்லிசை மன்னர்
**எம்.பி.பரமேஷ்** அவர்களின்
வெள்ளிவிழாவை முன்னிட்டு
தமிழ்மன்றத்தந்தை,கலைக்காவலர்
**ஸ்ரீபதி சிவனடியான்**
அவர்களின் தயாரிப்பில்
பரமேஷ் மாலினி வழங்கும்
**சங்கீத சாம்ராஜ்யம்**
CD இசைத்தட்டு
**வெளிவந்து விட்டது!**



நக்கலாக அகல்யா. ரம்யாவிற்கு வந்த ஆத்திரம் அழுகையாக மாறியது. படுக்கையில் குப்புற விழுந்து தன் மனத்தில் உள்ள பாரம் தீரும்வரை அழுது தீர்த்தாள்.தான் போவதால் தன் குடும்பத்தினருக்கு அவப்பெயர் என்று எண்ணி அதையும் நிறுத்தினாள்.

பெரியவீட்டின் வேலைக்காரி ரம்யாவின் அண்ணா வீட்டிற்குப் பக்கத்தில் இருப்பதால் அவர்கள் சுகங்களைக் கேட்டறிவதோடு சரி. இதையெல்லாம் அர்ஜூனிடம் சொல்லப்போனால் 'ஆரம்பிச்சிட்டியா உன் புராணத்தை...இஞ்ச பார் ரம்யா.. அம்மா பணம் பணம் என்று அலையுறா என்று நினைக்காதே...பணம் இல்லையானா யார் மதிப்பா?பணத்திலேயே புரண்ட எங்களுக்குதான் பணத்தைப் பற்றித் தெரியும்.உனக்கென்ன தெரியும்? உன்னைக் காதலித்துக்கைவிட்டேனா.. இல்லையே! பெரியவீட்டு மருமகளாகிட்டியே...அது போதாது? இனி சும்மா இரேன் ரம்யா!' என்று அவளை அடக்கிவிடுவான்.

ரம்யாவிற்கு எல்லாமே வெறுத்துவிட்டது.

காதலிக்கும்போது தந்திரப் பேச்சு. கலியாணமான பின்புதான் சுயரூபப் பேச்சா..?

'அண்ணா நான்உனக்குச்செய்த துரோகத்துக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்!' என்று தனக்குள்ளேயே அழுவாள்....

அவளது மனக்கஷ்டத்தைத் தீர்க்கும் மருந்தாக பிறந்தான் மகன் அஜய்.

குழந்தையின் சுருண்டமுடியும் செக்கச்சிவந்த நிறமும் ரம்யாவிற்கு அவளது அண்ணனைப் பார்த்த மாதிரியே இருக்கும். அஜயின் தளிர் நடையும் மழலைப் பேச்சிலுமே தன்னை மறந்துவிடுவாள் ரம்யா. ரம்யாவை ஏழை என்று ஏளனம் செய்தாலும் ஏழை பெற்றெடுத்தபேரனைமட்டும் தரையில்கூட இறக்கிவிட மாட்டார்கள் அர்ஜூனின் வீட்டில் உள்ளவர்கள்.


**பூவரசு வாழ்த்துகிறது!**

தமிழிசைப் பூங்காவில்
இசைத்தென்றல் வீசி
எண்ணற்ற உள்ளங்களைக் கொள்ளைகொண்டு
**சங்கீத சாம்ராஜ்யம்** அமைத்து
சக்கரவர்த்தியாகியிருக்கும்
மெல்லிசைமன்னர் ***எம்.பி.பரமேஷ்*** அவர்கள்
இன்னும்பல இசைச்சாதனைகளைப்புரிய
பூவரசு இனிய தமிழ் ஏடு
தன் அன்புவாசகர்களுடன் இணைந்துநின்று
வாழ்த்துகிறது!

அன்பன்
**இந்துமகேஷ்.**

அர்ஜூனின் தொழிற்சாலையும் குண்டடி பட்டு தகர்ந்துவிட்டதால் அவன் வியாபாரத்திலும் பேரிழப்பு. அர்ஜூன் பித்துப்பிடித்தவனானான். இதை எப்படி ஈடுசெய்வது? கடவுளே..என்ன வழி? பணத்திற்காக எதையும் செய்யும் நிலையில் இருந்தவனுக்கு வெளிநாட்டு பயணம்தான் சரியெனப்பட்டது. யார் தடுத்தும்கேட்கவில்லை...வெளிநாடு பயணமானான்...

இந்தநிலையில்தான் ரம்யா மீண்டும் கர்ப்பமாகியிருந்தாள்.

அர்ஜூனிடமிருந்து ஆறுமாதங்கள் ஒழுங்காக கடிதம் வந்து கொண்டிருந்தது. தொடர்ந்துவந்த கடிதம் திடீரெனத் தடைப்பட்டது. காரணம் தெரியாமல் தவித்தவர்கள் கடைசியில் ரம்யாவையும், இன்னும் வெளியில் வராத அவள் வயிற்றுக் குழந்தையையும் சபிக்கத் தொடங்கினார்கள்.

'தாயைப் போலவே பீடை பிடித்த பிள்ளையும் உருவாயிச்சுது...இது உருவான நேரம் வியாபாரமும் முறிஞ்சு தகப்பனையும் கண்காணாத தேசத்துக்கு அனுப்பி கடைசியில் தகப்பன் என்ன ஆனானோ ஏது ஆனானோ என்று புலம்பி அழ ஆரம்பிப்பாள் ஜானகி. ரம்யாவிற்கு மட்டும் கவலை இல்லையா என்ன? அவள் யாரை நோவாள்? விதியைத்தவிர!

இதோ இடுப்பு வலி ஆரம்பிச்சிட்டுதே...

அஜய் கேட்டது போலவே அவனுக்கு ஒரு தங்கை வந்து பிறந்தாள்.

வீட்டிற்குவந்த ரம்யாவிற்கு வேலைக்காரி சொன்ன விசயம் நெஞ்சை வெடிக்கச் செய்தது. அவள் அண்ணாவிற்கு பக்கவாதம் வந்து ஒரு பக்கம் செயலிழந்து விட்டதாம். வைத்தியர்களும் நோய்சரிவர குணமடைவதற்கு வருசங்களும் ஆகலாம் என்கிறார்களாம். அம்மாவுக்கும் இரவில் சரியாகக் கண் தெரியாது. அண்ணியும் பாவம் இயலாதவ.. கைக்குழந்தை வேறு...

'ஐயோ நான் என்ன செய்வேன்?' என்று இடிந்து உட்கார்ந்தவளுக்கு மேலும் பலமான இடிபோல பலமாதங்களின்பின் அர்ஜூனிடமிருந்துவந்த அந்தக் கடிதம் இருந்தது.

அர்ஜூன் ஒரு வெள்ளைக்காரப்பெண்ணை மணந்துகொள்ளப் போவதாயும், அதனால் பல வசதிகள் உண்டென்றும் அடிக்கடி ரம்யாவையும் வந்து பார்க்கலாம் என்றும் ஏதோவெல்லாம் எழுதியிருந்தான்..

பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்று எண்ணியதுபோல் சீறி யெழுந்தாள் ரம்யா.... கடிதத்தை மாமியாரின் முகத்தில் வீசியெறிந்தவள்,

'இதுவரை என்வாழ்க்கையை எண்ணித்தான்வாய்மூடியிருந்தேன்... வாழ்க்கையே போனபின் எனக்கு இங்கென்னவேலை? உங்க மகனை மன்றாடி அழுவேன் என்று நினைக்காதீங்க.. பணத்திற்காக இதைசெய்ய எண்ணியவர் வேறு எதை இனி செய்ய இருக்கு? பணம், உங்க மகன் கோடிக்கணக்கிலை அனுப்புவார்.. வைச்சுப் புரளுங்க... என் அண்ணா எனக்கு செய்ததற்கு பிரதிபலனாக நான் இதுவரை எதுவுமே செய்யவில்லை...இனித்தான் செய்யப்போகிறேன்!' என்றவள், வாடா...அஜய் என்று ஒருகையில் மகனையும், மறுகையில் மகளையும் அணைத்தபடி ஒருமுடிவுடன் அந்த வீட்டைவிட்டு இறங்கி நடக்க ஆரம்பித்தாள் ரம்யா...

□ □ □

## ரெயின தமிழ்ச்சங்கத்தின்
## 5வது ஆண்டு கலாச்சாரவிழா

கடந்த 23.09.95 அன்று மிகச்சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.
குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள், பரதநாட்டியங்கள், மாறுவேடப் போட்டிகள், அதிர்ஷ்டச்சீட்டிழுப்பு, சிறப்புச்சொற்பொழிவுகள், வில்லிசை எனப் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.
சிறப்புநிகழ்வாக சைவத்தமிழ் மகாசங்கத்தின் தலைவரும், ஆய்வாளரும், உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கக் கல்வி கலாச்சாரச் செயலாளரும் பிரபல எழுத்தாளருமான 'அழலாடி' சி. கமலநாதன் அவர்களது 'சைவ சமயமும் சர்வமத சமரசமும்' தொடர் ஆய்வு, நூல்வடிவில் வெளியிடப்பட்டது. பன்னாட்டுத் தமிழுறவுமன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் வெளியீட்டுவிழாவுக்கு தலைமை வகித்தார். சங்கத்தலைவர் திரு தனபாலசுந்தரம், தமிழருவி பிரதம ஆசிரியர் திரு நயினை மா.விஜயன் பெருங்கவிக்கோ வா.முசேதுராமன் கவிஞர் எழிலன் ஆகியோரின் விமரிசன, வாழ்த்துரைகளுடன் ஹம் நகர் காமாட்சி அம்பாள் ஆலய பிரதமகுருக்களான சிவஸ்ரீபாஸ்கரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து தமிழுக்குத் தொண்டாற்றி வரும் எழுத்தாளர்கள், பத்திரிகைஆசிரியர்கள், கலைஞர்கள் ஆகியோர் பெருங்கவிக்கோ அவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டு சங்கத்தால் கௌரவிக்கப்பட்டார்கள்.சிறப்பு வாழ்த்து மடல்களும் வழங்கப்பட்டன. நூலாசிரியர் திரு சி.கமலநாதன் அவர்களுக்கு 'தமிழறிவேந்தல்' என்ற சிறப்புப்பட்டம் வழங்கப்பட்டது. தமிழீழ உணர்வையூட்டும் சிறப்புரைகளை கே.ரி.கணேசலிங்கம்,முரளி மனோகரன்,செல்வி கவிதா ஆகியோர் நிகழ்த்திச் சிறப்பித்தார்கள். சிறுவர் சிறுமியருக்கான பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றவர்களின் உரைகளும் இடம்பெற்றன. ரெயின தமிழ் மக்களைக்கவர்ந்த விழாவாக இவ்விழா அமைந்திருந்தது.

தகவல் — **எழிலன்.**

---

இந்துமகேஷ் எழுதும்
**இரவு என்பது இருட்டல்ல**
அடுத்த இதழில்!

# இலக்கிய முத்துக்குளியல்.

— வீ.ஆர்.வரதராஜா.

எல்லாம் விதிப்படிதான் நடக்கும் என்பது உண்மையா? குற்றவாளிகள் எப்போதும் குற்றவாளிகளுடன்தான் சேர்வார்களா? தர்மம் எது? அதர்மம் எது? தர்மத்தைக்காக்க மறைந்திருந்தும் தாக்குதல் நடாத்தலாமா?
— இப்படிக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகலாம்!
வாழ்க்கையில் இப்படி ஆயிரம் கேள்விகள் எழும். ஆனால் எல்லாவற்றிற்கும் யார் பதில் சொல்வது? அப்படியே பதில் கிடைத்தாலும் அது சரியானதாக இருக்குமா? அப்படியே சரியானதாக இருந்தாலும் எத்தனை உள்ளங்களால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியும்?
எல்லாமே கேள்விக்குறிதான்....!

இராமாயணம் இந்த விடயத்தில் நமக்கு ஏதாவது கூறுகின்றதா என்று பார்ப்போம். பரதனின் மனைவி மாண்டவி அந்தப்புரத்தில் அமர்ந்திருக்கிறாள். அச்சமயம் அங்கு கைகேயி வந்தாள்.
"அம்மா மாண்டவி! என் மருமகளே! இந்த உலகமே என்னைத் தூற்றுகிறதே!நீ என்னம்மா நினைக்கிறாய் என்னைப்பற்றி?"என்று சோகமான குரலில் கேட்டாள்.
"அம்மா! என்னைப்பற்றித்தான் உங்களுக்குத்தெரியுமே! எல்லாம்விதிப்படிதான் நடக்கும் என்று கருதுபவள்நான்!நீங்கள் என் பதிக்கு முடிசூட்டி என்னைப் பட்டத்தரசியாக்க நினைத்தீர்கள்! நம் தசரதச்சக்கரவர்த்தியும் நாட்டுமக்களும் சக்கரவர்த்தித் திருமகனுக்கு மணிமகுடம்சூட்டி ஜனக குமாரியை ராணியாகப் பார்க்கநினைத்தார்கள்!ஆனால் நடந்தது என்ன? பட்டத்தரசியாக இல்லாமல் செய்துவிட்டது விதி. விதி இப்படி இருக்கும்போது நாம் என்னசெய்யமுடியும்?" என்று தன் மாமியாரைத் தேற்றினாள் மாண்டவி.

**குற்றவாளிகள் இருவர்.**

இராமன் மறைந்திருந்து தாக்கியபின்னர் — இராமபாணத்தை மார்பில் தாங்கி விழுந்துகிடக்கும் வாலி — தன்மீது இராமன் அம்பெய்த காரணத்தை அறிகிறான்.
"இராமா! சீதையை சிறைமீட்க நீ என்துணையை நாடியிருக்கக் கூடாதா?

ஒரு நொடியில் அதைச்சாதித்துக்கொடுத்திருப்பேனே! என்னைக் கண்டாலே அஞ்சும் இராவணன் நான் ஒரு வார்த்தை சொன்னாலேயே சீதையைச் சகல மரியாதைகளுடனும் அழைத்துவந்து உன்னிடம் ஒப்படைத்துவிட்டு மன்னிப்பும் கேட்கச் செய்திருப்பேனே!" என்றான் வாலி.

"வாலி! நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். பிறன்மனைவியை சிறை எடுத்துச்சென்றவன் இராவணன். நீயும் அதேதவறைச் செய்திருப்பவன்தான். ஒரு குற்றவாளியை எதிர்கொள்ள இன்னொரு குற்றவாளியையா துணை கொள்வது? சுக்ரீவன் இன்று நான் இருக்கும் நிலையிலேயே இருப்பான். அவன் துணையுடன் இராவணனைத் தண்டித்து சீதையை மீட்பதுதான் நியாயம்!" என்று பதிலுரைக்கின்றான் இராமன்.

## தர்மம் எது? அதர்மம் எது?

எது தர்மம் எது அதர்மம் என்பது எல்லாச்சந்தர்ப்பங்களிலும் எல்லோர்க்கும் விளங்காது. இதைத்தான் மறைவிலிருந்து தன்னைத் தாக்கியதற்காக ஏசிய வாலிக்கு இராமன் விளக்கினான்.

"தர்மம், அதர்மம், கர்மம், உலக வழக்கு, இவை எல்லாவற்றையும் நன்கு ஆராயாமல் நீ சிறு பிள்ளைத்தனமாக என்னை நிந்திக்கிறாய். வயதும் அனுபவமும் நிறைந்தவர்களும்,கூர்மையானபுத்திபடைத்தவர்களும், பிறருக்கு ஆதர்சபுருசர்களாய் விளங்குவோருமாக பெரியோர்களைச் சேவிக்காததினால் நீ கேவலம் வானர மனப்பான்மையுள்ளவனாகவே இருக்கிறாய்! பெரியோர்கள் ஒப்புக்கொள்ளும் தர்மம் வெகு சூட்சுமம்வாய்ந்தது.அதைக் கண்டுபிடிப்பது வெகுகடினம்.சகல சீவராசிகளின் இதயத்தில் குடியிருக்கும் பரமாத்மாவுக்குத் தான் எது நல்லது? எது தீயது? என்பது விளங்கும். இதிலிருந்து சித்தசுத்தியடைந்தவனுக்கே விருப்பு வெறுப்பு என்ற அழுக்குகள் மனச்சாட்சியின் ஒளியை மறைக்க இயலாதென்பது தெளிவு. அவனே தர்மத்தை அறியவல்லவன், அறிய ஆசைப்படுபவனும் அவனே! ஏனென்றால் சத்தியமும் தர்மமும் ஒன்றே!அந்தச் சத்தியம்தான் பரமாத்மா. இதைத்தான் புருகதாரண்ய உபநிடதம் விளக்குகின்றது. ஆன்மாவை அடக்கியாள தர்மத்தினால் முடியும். தர்மத்திற்கு மேலானது எதுவுமில்லை. தர்மத்தின் பலத்தால் பலமீனமானவனும் பலசாலியான அரசனையும் வெல்லலாமென்று துணிகின்றான். இந்த தர்மமே சத்தியம். ஆகையால் உண்மை பேசுபவனை 'தர்மம் பேசுகிறான்' என்கிறார்கள். அதேபோல் தர்மம் பேசுபவனை 'உண்மை உரைக்கிறான்' என்கிறார்கள்.இவை இரண்டும் ஒன்றே. கடமையை அறிந்து அதன்படி நடப்பவனுக்கு மனத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

## தாரையின் கேள்விகள்.

வாலியின் மனைவி தாரை!

கணவன் இராமனால் கொல்லப்பட்ட செய்தியை அறிந்ததும் அவள் மயங்கி விழுந்தாள். மீண்டும் விழித்தெழுந்து கணவன் வீழ்ந்து கிடந்த இடத்திற்கு வந்து கதறியழுதாள். அப்போது அவள் பார்வை இராமன் மீது பட்டது.

"இராமா! எந்த அம்பினால் என்கணவரைக் கொன்றீர்களோ அதே அம்பினால் என்னையும் கொன்றுவிடுங்கள்! இதனால் நான் என் கணவரை அடையக்கூடும். ஏனென்றால் நான் இல்லாமல் சொர்க்கத்தில்கூட அவருக்கு

நிம்மதி இருக்காது. அண்ணலே! மனைவியைப் பிரிந்த துன்பத்தைத் தாங்களும் அனுபவித்து வருகிறீர்கள். இதனால் மனைவியைப் பிரிவதால் வரும் கொடுமையைத் தாங்களும் அறிவீர்கள். ஆகவே என்னையும் அவரின் இடத்திற்கேஅனுப்பிவிடுங்கள்! இதனால் உங்களுக்குப் புண்ணியம் உண்டு!" என்றாள்.

இவ்விதம் புலம்பிய தாரைக்கு இராமன் கருணை ததும்பப் பின்வருமாறு தத்துவ உபதேசம் செய்கின்றார் —

"பெண்ணே! உன்கணவனைக்குறித்து இந்த அளவுக்கு நீ வருத்தப்பட வேண்டிய தேவையே இல்லை.நீ ஏன் அவனைப்பற்றிக் கவலைப்படுகிறாய்? உன் கணவன் இந்த உடலா?அல்லது இந்த உடலில் இருக்கும் உயிரா? என்பதை நன்கு யோசித்து பதில் சொல்! இந்த உடல்தான் உன் கணவன் என்றால் இது பஞ்சபூதங்களால் ஆனது. மாமிசம், இரத்தம், எலும்பு ஆகியவற்றாலானது. காலம்,கர்மம்,குணங்கள் ஆகியவற்றினால் உண்டானது. அத்தகைய உடல் இங்கேயேதான் இருந்துகொண்டிருக்கின்றது. நீ ஏன் வீணாகஅழுகின்றாய்? அல்லது உயிர்தான் உன்கணவன்என்று நீநினைத்தால் நீ வருந்தக்கூடாது. ஏனென்றால் ஆன்மாவுக்கு உருவம் கிடையாது. அது தோன்றுவதுமில்லை மறைவதுமில்லை. நிரந்தரமாக இருக்கிறதுஎன்று மக்கள் நினைப்பது போலவுமில்லை. அது வருவதுமில்லை போவதும் இல்லை. அது எங்கும் நிறைந்தது. அது ஆணும் அல்ல பெண்ணுமல்ல! ஆண்பெண்என்று சொல்லமுடியாத அலியுமல்ல. அது ஈடு, இணையற்றது. ஆகாயத்தைப்போலவே களங்கமில்லாதது. நித்தியமானது. ஞானமே உருவானது. பிறகு அதைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? என்றார்.

"இராமா!உடல் விறகுக்கட்டையைப்போல ஜடமானது.ஆன்மாதான் என்றுமே நிலைத்திருப்பது என்றால் இன்பம் துன்பம் எதனால் ஏற்படுகின்றன? அதை எனக்குத் தெரிவியுங்கள்!"என்று தாரை கேட்டாள்.

"உடலோடும் ஐம்புலன்களோடும் நான் எனது என்னும் தொடர்புள்ளவரையில் ஆன்மா — அநாத்மா என்னும் விவேகமில்லாதஜீவனுக்கு இன்பதுன்பங்களை அனுபவிக்கும் இந்த உலகத்துடன் தொடர்பு இருக்கின்றது.இந்த உலகம் ஆன்மாவுக்குப் பொய்யான தோற்றத்தையே கொடுத்திருக்கிறது.மெய்ஞ்ஞானம் பெறாத நிலையில் உண்மை புலனாகாது.உலகப்பற்றுமிக்கவனுக்கு கனவில் பலவகையானபொருட்கள் தோற்றம் அளிக்கின்றன. என்றாலும் அவையாவும் உண்மையல்ல. ஆரம்பமும் முடிவும் இல்லாதது அறியாமை. அதன் விளைவாக பலவற்றுடன் தொடர்புகொண்ட இந்த உலகம் பொய்யாக இருந்தபோதிலும் விருப்புவெறுப்பு ஆகியவற்றினால் நிறைந்திருக்கின்றது. பெண்ணே! மனம்தான் உலகம், மனம்தான் பந்தம். அப்படிப்பட்ட மனத்துடன் ஆன்மா ஒன்றுபடுவதனால்தான் அதனால் ஏற்படும் இன்பம் துன்பம் ஆகியவற்றின் பிடியில் சிக்கி விடுகிறது!"

**அசோக வனத்தில் சீதை.**

எங்கும் மாந்தோப்புக்கள். எங்கும் பசுங்கொடிகள் அடர்ந்திருந்தன. அசோகம், செண்பகம், நாககேசரம் முதலிய பலவகை மரங்கள். இளவேனில் நிறமான மலர்கள் பூத்துக் குலுங்கின. குளமும் வண்டும் இன்னிசைபாடின. மயில்கள் ஆடின. ஆங்காங்கே அழகான குளங்கள். அதற்குள் இரத்தினக் கற்களால் தளவரிசைசெய்து தங்கமிழைத்த படிக்கட்டுக்கள்! அமுதம்போன்ற

இனிய தெள்ளிய நன்னீர்!முத்தும் பவளமுமே மணல் வெளிபோலத்தோன்றின. தாமரைத்தடாகங்கள், நெய்தல் ஓடைகள் இடையிடையே அலரி மலர்கள் அன்றில்,அன்னம்,நாரை முதலிய பறவைகள் அங்கே இன்பமாக வாழ்ந்தன. நீல முகில்போன்ற மலையொன்று இருந்தது. அதில் கற்களாலான வீடுகள் விளங்கின உலகத்திலேயே மிகவும் அழகிய இடம் இது. மான்கள் இங்கும் அங்கும் உல்லாசமாக ஓடின. இந்த இடம்தான் அசோகவனம். இங்குதான் இராவணன் சீதையை சிறைவைத்திருக்கிறான்.

அரக்கியருக்கு மத்தியில் சீதை.

அந்த அன்னக் கொடியாள் தவத்தினால் தனிருடல் மெலிந்திருந்தாள். அழுக்காடையானது அவளுடைய பொன்மேனியைப் போர்த்திருந்தது. உள்ளத்திலிருந்து எழுகின்ற குமுறலானது துயரத்தின் பெருமூச்சாக வெளிவந்து கொண்டிருந்தது. துயரத்தை இன்னதென்று அறியாமல் இன்பங்களுக்கென்றே இட்டுப்பிறந்த அந்த மென்மை பொருந்திய மேனியாள் இப்போது துன்பக்கடலில் துடித்துக்கிடந்தாள். இந்த நிலையிலும் அவளுடைய ஒளியானது நான்கு திசைகளிலும் நர்த்தனமிட்டுக் கொண்டேயிருந்தது.
வளர்பிறையின் தொடக்கத்தில் தோன்றும் பிறைக்கொழுந்து போலவும், புகைமண்டிக் கிடக்கின்ற சுடர்மணிபோலவும், அங்காரகன் பிடித்த ரோகிணி போலவும், மலையை ஒத்த செல்வம் மண்ணில் புரள்வதைப்போலவும், நெடுநாட்கள் நம்பிக்கை இழந்துவிட்ட அன்புபோலவும், எந்நாளும் நிறைவேறாத விருப்பம்போலவும், இடையூறுகள் சூழ்ந்துநிற்கின்ற வெற்றியைப் போலவும், கதி கலங்கிய அறிவுச்சுடர்போலவும், வீண்பழியினால் குன்றிப்போய்க்கிடக்கின்ற பெரும்புகழ் போலவும், கருமுகில் கவ்விய கலைமதி போலவும், பரம்பொருளோடு பொருந்தாமையால் நிலைத்து நிற்காத கல்விபோலவும், பண்பாடின்மையால் வேற்றுப் பொருள்தரும் பேச்சுப் போலவும் அசோகவனத்தில் சீதை தலைகவிழ்ந்து அமர்ந்திருந்தாள். அப்போது —
தன் குழுவைப் பிரிந்துவிட்ட ஒரு பெண்மானை வேட்டைநாய்கள் சூழ்வதைப் போன்று அரக்கியர் சீதையைச் சூழ்ந்துகொண்டனர்.

(முத்துக்குளியல் தொடரும்)

விரைவில்...

உங்கள் அபிமான எழுத்தாளர்
இராஜன் முருகவேல் எழுதும்
# கைக்கெட்டாத கைமாத்துக்கள்
(தொடர்நவீனம்)

பூவரசு தருகிறது!

# பிறமொழியும் கற்போம்!

(டொச் — தமிழ் பாடத்தொடர். 5.)

-தோமாஸ் வெல்.

aus-இருந்து (இடத்திலிருந்து, பொருளிலிருந்து)

**Robert geht aus dem Haus**
றோபேர்ட் வீட்டிலிருந்து போகிறான்.
**Robert kommt aus London**
றோபேர்ட் இலண்டனிலிருந்து வருகிறான்.
**Robert trinkt Bier aus einem Glas.**
றோபேர்ட் கிளாசிலிருந்து பியர் குடிக்கிறான்.

von — இருந்து

**Er hat das geld von seinem Vater**
அவன் அவனுடைய தகப்பனின் பணத்தை வைத்திருக்கிறான்.
(அவன் வைத்திருப்பது அவனது தகப்பனின் பணம் என்பது பொருள்)
**Der Zug kommt von Mainz**
புகையிரத வண்டி மைன்ஸிலிருந்து வருகிறது.

nach- க்கு

**Wir fahren nach Kandy.**
நாங்கள் கண்டிக்குப் (பிரயாணம்) போகின்றோம்.
**Er geht nach oben**
அவன் மேலே போகின்றான்.
**Wir gehen nach Haus(e)**
நாங்கள் வீட்டிற்குப் போகின்றோம்.
**Robert geht zur Universität**
றோபேர்ட் பல்கலைக் கழகத்திற்குப்போகின்றான்
**Ich gehe zum Essen.**
நான் சாப்பாட்டுக்குப் போகின்றேன்.
**Ich bin zu Haus(e)**
நான் வீட்டில் இருக்கின்றேன்.

bei — உடன்.

**Roy wohnt bei seiner Tante.**
றோய் அவனுடைய மாமியுடன் இருக்கின்றான்.
**Mein Hotel ist beim Bahnhof.**
எனது ஹோட்டல் புகையிரத நிலையத்துடன் (அதாவது பக்கத்திலேயே) உள்ளது.

gegenüber – எதிராக, முன்பாக

**Die Wohnung liegt der Post gegenüber.**
வசிப்பிடம் தபால் நிலையத்திற்கு எதிராக உள்ளது.
(die Post-தபால் அல்லது தபால் நிலையம்)

nach-பின்பு

**Nach der Vorlesung geht er nach Hause**
வாசித்தபின்பு அவன் வீட்டிற்குப் போகின்றான்.
**Was machst du nach dem Essen?**
சாப்பாட்டிற்குப் பின்பு என்ன செய்கின்றாய்?

seit – அன்றிலிருந்து.

**Ich wohne seit einer Wohne hier.**
ஒரு கிழமையாக இங்கே வசிக்கின்றேன்.
**Er studiert seit drei Jahren.**
அவன் 3 வருடங்களாக படிக்கின்றான்.

durch- ஊடாக

**Er geht durch den Park**
அவன் பூங்காவிற்கூடாக போகின்றான்.
**Ich sehe durch das Fenster.**
நான் ஜன்னலுக்கூடாகப் பார்க்கின்றேன்.

gegen- எதிராக

**Das Auto fährt gegen ein Haus**
மோட்டார் வண்டி ஒரு வீட்டிற்கு எதிராக ஓடுகின்றது(மோதுகின்றது)

um – சுற்றம்

**Wir sitzen um den Tisch**
நாங்கள் மேசையைச் சுற்றியிருக்கின்றோம்
**Das Auto fährt um die Stadt.**
மோட்டார்வண்டி நகரத்தைச் சுற்றி ஓடுகின்றது.

entlang – வழியாக

**Wir fahren die Straße entlang.**
நாங்கள் வீதிவழியாக ஓடுகின்றோம். (மோட்டார் வண்டி)

gegen – கிட்டத்தட்ட

Gegen 8Uhr komme ich zum Essen.
கிட்டத்தட்ட 8மணியளவில் நான் சாப்பாட்டுக்கு வருகின்றேன்.

Um– மணிக்கு

Um 8Uhr komme ich zum Essen.
நான் எட்டு மணிக்கு சாப்பாட்டுக்கு வருகின்றேன்.

für–க்காக

Er kauft ein Haus für seinem Sohn.
அவன் அவனுடைய மகனிற்காக ஒரு வீட்டை விலைக்கு வாங்குகிறான்.
Hier ist ein Brief für dich.
உனக்காக ஒரு கடிதம் இங்கேயுள்ளது.

Ohne– இல்லாமல்

Ohne Auto kann man leben.
காரில்லாமல் மனிதனால் வாழமுடியும்.
Ohne dich kann ich nicht leben.
நீயில்லாமல் நான் (என்னால்)வாழமுடியாது.

mit– உடன் (ஒரு பொருளால்)

Ich schreibe mit einem Füller.
நான் மைப்பேனாவால் எழுதுகின்றேன்.
Ich möchte mit dir kommen
நான் உன்னுடன் வருவதற்கு விரும்புகின்றேன்.
Er lernt mit seinem Freund.
அவன் அவனுடைய நண்பனுடன் படிக்கின்றான்.

lernen– பாடசாலையில் படித்தல்.
studieren – பல்கலைக் கழகத்தில் படித்தல்
schüler– பாடசாலை மாணவன்
Student – பல்கலைக்கழக மாணவன்.

bei dem– beim
vor dem– vom
zu dem– zum
zu der– zur

durch das– durchs
für das– fürs
um das– ums.

(தொடரும்)

# சத்தியத்தின் சுவடுகள்

*திசை தெரியாமல் நடப்பவர்களால்*
*சேரவேண்டிய இடத்தைச் சென்றடையும் தைரியத்தைத்*
*தொடர்ந்துகொண்டிருக்க இயலாது.*
*குறிக்கோள் என்ன என்பதை உணராதவர்களை*
*எவராலும் வழி நடத்தமுடியும்.*
*பயத்தின் பிரதிபலப்பான அவர்கள் அதிகாரத்திற்கு —*
*அதன் பயமுறுத்தலுக்குப் பணிந்து நிற்பார்கள்.*
*நல்ல நோக்கமில்லாதவர்களால் இவர்களைக் கைப்பற்றிக்கொள்ள*
*மிக இலகுவில் இயலும்.*
*ஆனால் சரியான சிந்தனை, நோக்கம், பாதை, அறிவு இவற்றின்*
*அணைவு கொண்ட தனிமனிதனோ தன்னிலேயே ஒரு*
*தனித்தன்மைகொண்ட சமூகமாகத் திகழ்ந்துவிடுகிறான்.*
*அவனது சிந்தனையில் சரியைச் சரியாகப் பார்த்தல்*
*சரிவந்துவிடுகின்றது.*
*இப்படிப்பட்ட தகைமை சுய தகைமையாகும்.*
*யாராலும் புகுக்கவைக்க முடியாதது.*
*இதனால்தான் விடுதலைத்தலைவர்கள் அரசியல் தலைவர்களினின்று*
*மிக மாறுபட்டுத் திகழ்கிறார்கள்.*
*சுதந்திரவேட்கை என்பது*
*ஒரு நாட்டுக்கு அல்லது இனத்துக்கு மட்டும் உரியதன்று.*
*அது முழு உலகுக்குமே பொதுவானது.*
*அந்த வேட்கைக்கு*
*விலங்குகளும் பறவைகளும்கூட விதிவிலக்கல்ல.*
*மனிதத்துவத்தின் மதிப்பு எங்கே குறைக்கப்படுகிறதோ —*
*மனிதத்துவம் எங்கே மிதிக்கப்படுகின்றதோ —*
*மனிதத்துவம் எங்கே அலட்சியப்படுத்தப்படுகின்றதோ*
*அங்கெல்லாம் சுதந்திரத்தின் தேவை வலியுறுத்தப்பட வேண்டிய*
*கட்டாய நிலை உருவாகின்றது.*
*அதை உருவாக்கும் பணியின் புனிதத்தன்மையை உணர்ந்து*
*ஏற்பவனைக் கண்டு பிடிப்பதே ஒரு மாபெரும் அனுபவமாக ஆகி*
*— அந்த அனுபவமே அதற்கான தலைவனையும்ஆக்கி*
*வைத்துவிடுகிறது.*
*அதன் தனித்துவம்தான் சத்தியத்தின் பிம்பமாக —*
*வீரத்தின் விளைநிலமாக — நீதியின் பிரதிபலிப்பாக — சுதந்திரக்*

குரலோசையின் அடித்தளமாக நின்று பிடிக்கின்றது.
அத்தகைய வீரம் விதைந்த களங்களின் வரலாறுகள் புதியனவல்ல.
ஆண்டாண்டுக்காலமாக சுதந்திர வரைபடத்தில்
புதுப்புதுக் கோடுகளாக
அவை கீறப்பட்டுக் கொண்டே வருகின்றன.
அவற்றின் வரலாறுகளின் சில பக்கங்கள் — பகுதிகள்கூட
நமக்கு — மனிதத்துவத்திற்கு
மிகமிகத் தேவைப்படும் மருந்துகளாகும்.
மனிதனின் பயனுக்காக உருவாக்கப்பட்ட
மொழிகள் — மதங்கள் — கொள்கைகள் போன்றவை
சுயநலமிகளாலும் சந்தர்ப்ப வாதிகளாலும்
களங்கப்படுத்தப்பட அவர்கள் ஊட்டிவளர்த்த
வெறியுணர்வுகளே காரணிகள்.
இந்த வெறியுணர்வுகள் மற்றவனின் வாழ்வுரிமையிலும்
கைவைக்க முனையும்போது அதற்கான பலத்தை — அதிகாரத்தை,
அரசியல்ரீதியாக — அதிகாரமாக — அரசாங்கமாகக்கைக்கொண்டுவிட —
ஒரு நாட்டின் ஒரு சாரார் மறுசாராரின் உரிமைகளைத்
தமது சுய நன்மைக்காக மறுக்கும் நிலை உருவாகின்றது.
இதன் பிரதிபலிப்பானது தனித்துவத்தின் தேவையைப்
பாதிக்கப்பட்ட பகுதியினர்க்கு உணர்த்தும் நிலையை உருவாக்கும்.
அவ்வெண்ணத்தின் பரிணாமமானது
தனக்குரியதைத் தரமறுப்பவனைக் கெஞ்ச மறுத்து —
பறித்தெடுத்துத் தன்னுரிமையைக் காத்துக்கொள்ளும்
சக்தியாகப் பரிணமிக்கின்றது.
அதை சரித்திரம் பல வடிவங்களில் பதிந்துவைத்திருந்தாலும்
அடிப்படை மாறாமலிருப்பதைமட்டும் மறுக்கமுடியாது.
ஆம் — சத்தியத்தின் வார்த்தைகளே சரித்திரங்களாகப்
பதிந்து கொண்டிருக்கின்றன.
சத்தியத்தின் சுவடுகளே
சுதந்திரத்தின் சுவடுகளாகப் பதிந்து கொண்டிருக்கின்றன.
அந்தச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்ற மாந்தர்களே
மாவீரர்களானார்கள்
பிறக்கும் மனிதர்கள் சாகிறார்கள்.
மரணிக்கும் வீரர்களோ வாழ்கிறார்கள். எப்படி?
இலட்சியத்தால் — அதைக்கடைப்பிடித்த வீரியத்தால். சத்தியத்தால்
அதை மதித்த உத்தமத்தால்.
சரித்திரத்தின் சமுத்திரத்தின் நடுவே ஆங்காங்கே
வெளிச்ச வீடுகளாய் வழிகாட்டிக்கொண்டிருக்கும் அவர்களில்
நாம் காணக்கூடிய சில விளக்குகளை நாம்
அருகில் சென்று பார்ப்பதற்கே
எனது எழுதுகோல் பாதை வரைய முனைகின்றது.
ஆபிரிக்காவின் தென்பகுதிக்குள் குடிபுகுந்த
வெள்ளையினத்தவர்களால் தாயகம் பறிக்கப்பட்டு
தத்தளித்த தென்னாபிரிக்க கறுப்பின மக்களின்
வரலாற்றின் பகுதிகளை வாசித்தபோது

*நீதிக்கும் அநீதிக்குமிடையில் நடந்த அப்போராட்டத்தின்*
*பெரும்பகுதிகள் இன்றும் தொடர்வதையும்*
*விசேடமாக இலங்கையில் நிலவுவதையும் என்மனம் உணர்ந்தது.*
*உங்களோடும் அவ்வுணர்வு பகிர்ந்து கொள்ளப்படவேண்டியுது*
*அவசியமெனப்பட்டது.*
*சரித்திரத்தின் சாட்சியங்களை அறிதலும் அறிவித்தலும்*
*தற்கால தமிழினத்தின் கட்டாயக்கடமை என்பதில்*
*கருத்து வேறுபாடு இருக்க முடியாதென்ற நம்பிக்கையுடனேயே*
*இதைத்தொடங்குகிறேன்.*
*வாசக அன்பர்களின் அபிப்பிராயங்கள் என் நோக்கத்தின்*
*வெற்றிக்குப் பெரிதும் உதவ முடியும்.*
*தமிழனுக்கான பணியை ஒரு தமிழன் செய்ய விழைகிறேன்*
*சத்தியத்தின் சுவடுகளில் நமது பாதங்களும் பதியட்டுமே!*

— எழிலன்.

**1.**
**இருண்ட கண்டத்தை**
**ஆண்ட இருண்ட இதயங்கள்.**

அந்த நீதிமன்றம் ஆதிக்கவெறியின் பிரதிநிதித்துவத்தின் இல்லமாக சட்டமென்ற போர்வையைத் தன்மேல் போர்த்திக்கொண்டு, தன் அநீதியின் சுயவுருவிற்கு அந்தஸ்து தேடிக்கொண்டிருந்தது.

இருண்ட கண்டமெனப் பெயர்பெற்ற ஆபிரிக்காவின் மிக இருண்ட பகுதியாக அப்போது தென்னாபிரிக்காவிருந்த காலம்.

நீதியைக் கேட்டுக்கேட்டு அலுத்தவர்கள்,அது கிடைக்கவேகிடைக்காது என்று உறுதியாகத் தெரிந்ததன்பின் பறித்தெடுக்க முன்வந்த புதியசிந்தனைக்கு, ஊட்டமூட்டி வளர்த்த சிந்தனையாளர்களை அன்றைய வெள்ளை அரசு நீதிதேவன் முன் நிறுத்தி விசாரணைசெய்வதாக வெறும் வேடிக்கைகாட்டி, நியாயத்தைத் தூக்கிலிட்டுவிட்டு தன்னைக்காத்துக்கொள்ள கங்கணங்கொண்டு, சத்தியத்தின் பிரதிநிதிகளை வெறும் பயங்கரவாதிகளாக உலகுக்குப்படங்காட்டித் தன் தரங்கெட்ட சுயநல, ஆதிக்க வெறியை நியாயப்படுத்த முற்பட்டுக் கொண்டிருந்தது.

சத்தியத்தை நெஞ்சில்சுமந்த சுத்தவீரர்களின் தெளிவானசிந்தனையும் உறுதியான கொள்கையும் உலக அரங்கிற்கு மிகமிகத் தேவைப்பட்ட காலமது. பலத்தின் பின்னே நீதியைக் கட்டிவைத்துவிட்டு பலமே நியாயம் அதுவே நீதி என்று ஆக்கிரமிப்பின் அகன்றவாய் ஊளையிட — அதைக் கைகட்டி வாய்பொத்தி அவதானிக்கமட்டுமே கூடியதாக உலகம் கோழைத்தனத்தில் உழன்று கொண்டிருக்க — என் பசியை நானே தீர்ப்பதே சாத்தியம், எனக்காக எவருண்டும் என்பசி தீராது என்று சரியாகச்சிந்தித்த சமுதாயத்தின் விழிப்புணர்வு, அந்தப்பசியை — சுதந்திரப் பசியைத் தீர்க்க, சரியான பாதையை சரியாகக் காட்ட சரியான தலைமையைத் தேடிக்கொண்டு இருந்தது.

வீரம் சத்தியத்தோடு சேர்ந்து நின்று உண்மை என்றால்என்ன என்று இலக்கணம் கற்பித்த அந்த வரலாற்று முக்கியத்துவமிக்க நாவின் நாயகனாக, சத்தியத்தின் சிற்பியாக மாவீரன் நெல்சன் மண்டேலா நின்று கொண்டிருந்தான்.

விடியாத இருட்டென்று ஒன்று இல்லை என்று விளங்காத மக்களுக்கு இருளின் நிலை இறுதியல்ல வெளிச்சம் வருவதே உறுதி என்று விளங்க வைத்து வழிநடத்தும் பாரியபொறுப்பை மனப்பூர்வமாகநம்பி, ஏற்றுக் கொண்டு நிமிர்ந்து நின்ற அந்த மாவீரனுடன் நீதிதேவன் சேர்ந்து நின்றுகொண்டு தன் பெயரில் நாடகமாடும்பொய்யரை,அந்த வரலாற்றுநாயகனின் சத்தியவார்த்தைகளால் சுட்டுப்பொசுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

ஆம்! அங்கே உண்மை ஆட்சிசெய்ய ஆயத்தமாகிக்கொண்டிருந்தது.

"இந்தநீதிமன்றத்திற்கு — என்னைவிசாரிக்க அல்லது தீர்ப்பளிக்க அதற்கிருக்கும் அதிகாரத்திற்கு நான் சவால்விடுகிறேன். ஏனென்றால் முதலாவதாக இது ஒரு நீதியான நியாயமான சரியான விசாரணையாக அமையாது என அஞ்சுகிறேன். இரண்டாவதாக என்னைப்பிரதிபலிக்கும்,என்னினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில்லாதவொரு நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களால் சட்டரீதியாகவோ ஒழுங்குமுறையாகவோ கட்டுப்படுத்தப்பட முடியாதவன் நான் என என்னைக் கருதுகிறேன். எத்தகைய நீதி, குற்றஞ்சுமத்துபவர்களையே நீதி வழங்கும் பணியில் இருத்திவிட்டு நீதியை வழங்கக்கூடும்? வெள்ளையனே எல்லா சட்டங்களையும் ஆக்குகிறான். அவன் எங்களை அவனது நீதி மன்றங்களுக்குள் இழுத்துவந்து எங்களைக்குற்றஞ்சாட்டுகின்றான். அத்துடன் அவனே எங்களுக்குத் தீர்ப்பும் வழங்குகிறான். இந்த மன்றத்துள் நான் எதிர்நோக்கும் நீதிபதி ஒரு வெள்ளையர். என்னைக் குறுக்குவிசாரணை செய்பவர் ஒரு வெள்ளையரான சட்டத்தரணி. என்னை விசாரணைக் கூண்டிற்குள் அழைத்துச்செல்லும் ஒழுங்காளரும் வெள்ளையர். ஆக — வெள்ளையின ஆதிக்க அழுத்தம் இங்கே முழுமையாக நிறைந்து அழுந்தியிருக்கிறது. நான் வாக்களிக்கும் உரிமையற்றவனாய் இருக்கிறதன் காரணம் இந்த நாட்டிலே வெள்ளையர்களால் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்ட நாடாளுமன்றம் என்ற ஒன்று இருப்பதுதான் என நான் நினைவுற வேண்டியவனாய் இருக்கிறேன்."

சற்று நின்று மூச்சினை மீண்டும் ஒரு தடவை இழுத்துக் கொண்டது அந்த வேங்கை. தண்டனைக்கஞ்சாத வீரத்தை வார்த்தையில் உமிழத் தொடர்ந்தான் அவ்வீரன்.

"நான் நிலமற்றவனாய் இருக்கிறேன். ஏனென்றால் சிறுபான்மையினரான வெள்ளையர்கள் எமது நிலத்தின் நற்பெரும்பகுதியை அள்ளிக்கொண்டு எனது மக்களை வறுமைசூழ் சூழலுக்கும் நெருக்கமும் நெருக்கடியுமான வாழ்வுமுறைக்கும் கட்டாயப்படுத்தினார்கள். அதனால் பசியாலும் நோயாலும் வதை கொண்டோம். இந்த மன்றங்கள் பக்கசார்பற்று நீதி வழங்கும் தகுதியற்றவை. அவை வெள்ளையரிலிருந்து விடுதலை பெற விழையும் எம்மக்களைத் தடுக்கும் நோக்கம் கொண்ட தண்டிக்கும் கருவிகளாகவே வெள்ளையரால் ஆக்கி வைக்கப்பட்டிருக்கின்றன."

நெல்சன் மண்டேலா தன்னினத்தின் விடிவைக் கனவாகவல்ல யதார்த்தமாகப் பார்த்தவன். அவனது மனவுறுதி அவனது மக்களிலும் மிளிர்வதையே அவன் எதிர்பார்த்தான்.அவனோடு,அவனுணர்வோடு இணைந்த இதயங்கள் அவனில்லாத போதும் அவனது நினைவைச் சுமந்து திரிந்தன. ஏன் தெரியுமா? வாழ்க்கையின் பெறுமதியே சுதந்திரம்தான் என்பதை அவை உணர்ந்தமைதான்.

சட்டமறுப்பு என்பது நீதி மறுப்பு அல்ல என்று உணர்ந்து உணர்த்தும் கடமையை மகாத்மா காந்தி இந்திய மண்ணில் விதைத்ததால் விடுதலைக்கு அங்கே வித்திடப்பட்டது. அவரும்கூட அதற்கான அரிச்சுவடியை இங்குதான்

கற்றார்.

மனிதத்துவத்தின் அத்திவாரமான சுதந்திரமானது தனிநபர் சொத்தல்ல. தனியின உடைமையல்ல. தனியொருநாட்டின் உரிமையுமல்ல. அதனை அடைய முடியாத மாந்தரின் இதயவெடிப்பின் எதிரொலியானது சத்தியத்தின் நோக்கினைக் கொண்டிருப்பதால் அவர்களின்பாதையில் சரிபிழை என்று ஒன்றின்றி விடுதலைக்காக செய்யும் எதுவும் விடுதலைப் பாதையின் வழிசமைப்பே என ஆகிவிடுகின்றது. அவர்களின் கண்ணீரும் செந்நீரும் பயத்தைப் பிரதிபலிப்பதில்லை. உணர்வைக் கொந்தளிக்கச் செய்யும் தீக்கொழுந்துகளாகவே அவை சரித்திரத்தில் பதியப்பட்டன. பதியப்படுகின்றன. பதியப்படப் போகின்றன.

(இன்னும் வரும்)

## அதர்மம்!

*தத்துவம் பேசிடும் அம்மா....*
*தருவாவா சுதந்திரம் சும்மா?*
*அகிலத்தை ஏமாற்ற அம்மா...*
*ஆடுறா நாடகம் சும்மா...!*

*முட்டைக்கும் கருவுக்கும் அம்மா...*
*முழுவேற்றுமை சொல்லுறா சும்மா..*
*'மொட்டையர்' வெருட்டுக்கு பயந்த அம்மா...*
*முற்போக்கு ஆட்டம்தான் போடுறா சும்மா!*

*முன்னவர் செய்தது பிழையென்ற அம்மா...*
*பின்வந்து என்னதான் செய்கிறா சும்மா....*
*குழிதோண்டி ஆட்சியைப் பிடித்தவா! அம்மா இப்போ*
*கொலைசெய்த தமிழரை ஆற்றிலே வீசுறா சும்மா — தன்னை*

*கொண்டவன் விஜயின் கொள்கையில் ஆட்சி*
*கொண்டுவருவேன் என்றவா அம்மா...இப்போ*
*பெற்றவர் வழியிலே நாட்டினை(த்) தமிழரை அம்மா*
*பேயாட்டம் ஆட்டுறா சும்மா....!*

*தமிழர் தலையிலே குண்டினைப்போட்டு*
*தன் பதவியைக் காத்திடும் அம்மா...*
*உதட்டாலே தத்துவம் தர்மம் பேசுறா சும்மா...*
*உள்ளத்தால் அதர்மமே செய்கிறா அம்மா!*

— வேலணையூர்
பொன்னண்ணா.

# மனத்துடிப்பு

*காக்கையினக் கூட்டினிலே*
*குயில்தானும் முட்டையிட*
*தன்னினம்தான் என்றெண்ணி*
*காக்கையதும் அடைகாத்திடவே*
*குஞ்சதும் உயிர் பெற்றதனால்*
*மாறிவிடுமோ.....? அவை*
*காக்கையினம்போல்!*

*காக்கைக்கும் ஓர் நல்மனமிங்கே*
*இரையொன்றைக் கண்டதனால்*
*குரல்கொடுத்து அழைத்திடவே*
*கூடியதே காக்கைதனும்*
*கண்டெடுத்த இரையதனை*
*ஒன்றுகூடி யுண்டதனால்*
*காக்கைக்கும்*
*ஓர் நல்மனமிங்கே!*

*நிலையில்லா மனிதர்களால்*
*நிலைதொலைந்த வார்த்தைகளாம்*
*சாதியென்றும் சனம் என்றும்*
*ஏழையென்றும் எழிதென்றும்*
*பணமென்றும் பகட்டென்றும்*
*ஓதிவிட்டார் பிரிவு பாடி*
*ஒரு இனம் தான் இங்கிருக்க*
*பல இனத்தைக் காட்டிவிட்டார்*
*இந்நிலையிங்கே மாறிவிட்டால்*
*நாம் பேசும் தமிழுக்கும்*
*பெருமையன்றோ...!*

—ராஜன்ஸ் ஆட்டிஸ்ட்.

## இனிதா யெழும் பயிர்கள்.

மண்ணின் மீட்பில் மண்மடி வீழ்ந்த
மண்மா மக்களே!
கண்ணிமைப்பொழுதில் கருவிழி மறையுமுன்
கடலினிற் கரைந்தவரே!
உண்மையை உணர்த்த உணராப்போக
உடலினை ஈந்தவரே!
உலகில் உரிமையை இழந்த ஒரு குலம்
என்றதை உணர்ந்தவரே!

பூமித்தாயின் விலங்கையொடிக்க
புரட்சியில் மாய்ந்தவரே!
புலராப்பொழுதாய் கல்லறையுள்ளே
புண்பட்டுத் துயில்பவரே!
எங்கோ எங்கள் உரிமையைத்தொலைத்தோம்
ஏற்றிட முனையாவீர்!
அன்னை பூமியின் அடிமையை மீட்க
மறுபடி எழுவீரே1
பொறுமையை இழந்தாள் அன்னை பூமி
புறப்பட்டு வாரீரே!
பொங்கும் உறவை நீராய்வார்த்தோம்
இனிதா யெழும்பயிராவீரே!

அகிம்சை என்பது அழகாயிருந்தது
மகாத்மா கூறுகையில்!
அமைதி என்பது சுதியாயிருந்தது
அகதியாய் வாழுகையில்!
சத்தியம் என்பது சொகுசாய் இருந்தது
ஒரு சரித்திரம் அழிவினிலே!
பத்தியம்காத்தும் பயனில்லைப் பேற்றில்
படையல்கள் சாகசமே!
முத்தியைத்தேட முனைந்திட்ட மங்கையும்
பேரினப் பக்திக்கு இரையானார்!

ஐக்கியம் ஒன்றியம் சமத்துவம் விழிப்பு
அதன் உரமாய்ப் போட்டிடுவோம்!
விடியல் என்ற கலப்பையைப் பூட்டி
விளைநிலம் உழுதிடுவோம்!
அதலொரு பயிராய் உருவிடும் களையை
அறுத்தே வீசிடுவோம்!
அங்கே முளைக்கும் சுதந்திர பாலகர்
இனிதா யெழும்பயிர்கள்!

வளரும்பயிரே மாணவர் குலமே
மனதை உழுதோமே!
ஒழுக்கம் இறைமை கல்வி எழுச்சியை
உங்கள் உளமதில் விதைத்தோமே!
மலரும் மாணவர் எதிர்வை நோக்கி
தமிழினம் தவிக்கிறதே!
மாற்றான் பூமியில் வீழ்ந்து கிடப்பதை
இளவாய் நினைப்பீரே!
புலரும் பொழுதில் பூவாய் மனிதம்
அறுவடை செய்யுங்கள்
புத்தம் புதிய பூங்காவனங்கள்
இனிதா யெழும்பயிர்கள்!

பெண்ணினமே எம்சக இனமே!
ஒடுக்கு முறைகளை ஒடுக்குங்கள்!
புதுமைப்புரட்சியில் சுதந்திரம்காண
உரிமை விதையினை ஊன்றுங்கள்!
சுதந்திரம்பரிசாய் கைகளில் தருவார்
காத்துக்கிடக்காதீர். தினம்
சோடினைப் பொருளாய் சோரம்போனால்
பெண்பாடுகள் தொடராகும்!
'பெண்ணிலைவாதம்' விதையினை
விரைவாய் விதைத்திட முந்துங்கள்!
பேறாய் உன்னினம் நாளை நமது
இனிதா யெழும்பயிர்கள்!

ஏழ்மையை ஆண்டும் எழுத்தையாளும்
எழுத்தாள அன்பர்களே!
இலவசம் ஆளும் நெஞ்சில் ஈரம்வீசும்
கவிவள கவிஞர்களே!
சீராய் உங்கள் கருத்தை தூவும்
சிந்தனையாள்பவரே! நீங்கள்
எல்லாமாகி இறைமையுடையோர்
என்பதையுணர்வோமே!
இருப்பினும் மனிதம் சிற்பி.
பேனா முனைகளைப் பதிப்பீரே!
அற்புதமான சமூகம்அங்கே
இனிதா யெழும்பயிர்கள்!

**— கோசல்யா சொர்ணலிங்கம்**

## மண்ணை மறந்தவன்

முளைக்கும் மண்ணை
மிதித்தவன்....
தனக்காகக் காயம்பட்ட
யாவற்றையும் கற்பழித்தவன்....

வரலாற்றையே...
வறுத்தெடுத்தவன்!
நன்றி மறந்தவன்...
இவன் தன் இரத்த அணுக்களையே
இரவாக்கியவன்...
இவனுக்கு
சொல்லோவியங்கள் வேண்டுமானால்
சொந்தமாகலாம்...ஆனால்
மாந்த மன இரத்தத்தில்
இவன் பெயரெழுத்துக்கள் பதியாது!

மண்ணை மறந்தவன்...
ஏன் இன்னும் இவனுக்கு
வீர வணக்கம்!

மரண பசிக்கு
இந்த மண்ணா படுக்கையாவது?

எந்த வயிறு இவன் வருகைக்காக
வருத்திக்கொண்டது?
இப்போது இந்த வயிறே
விடியலுக்காய் விழித்திருக்கிறது!

அழுதிடுவோம்... ஒரு
நயவஞ்சகப் பேயை ஈன்றதற்காய்
ஒருசேர ஒப்பாரியிடுவோம்!

**-சீ. அருணாசலம்**
பகாவ், மலேசியா.

# மதுரகவி வி.கந்தவனம்
## அவர்களுடன் ஒரு சந்திப்பு!



புலம்பெயர்ந்த போதும்
தாயகத்து நினைவுகளையே
சுவாசித்துக்கொண்டிருக்கும்
எண்ணற்ற உள்ளங்கள்...
இவர்களிடையே எத்தனையோ கலைஞர்கள்....
படைப்பாளர்கள்....!
**ஆனால்—**
எங்கே, எந்தநிலையில் வாழ்ந்தாலும்,
எத்தனை ஆண்டுகளைக் கடந்தாலும்
எழுத்தை முழுமூச்சாய் நேசிக்கும்
இதயங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

இந்த வரிசையில்
மூத்த தலைமுறை எழுத்தாளர்களில்
மதுரகவி வி.கந்தவனம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

அண்மையில் கனடாவில் மணிவிழாக்கண்ட கவிஞர்,
வெற்றிமணி விழாவில் கலந்துகொள்ள
ஜெர்மனிக்கு வருகைதந்திருந்தபோது
பூவரசு வாசகர்களுக்குத் தந்த செவ்வியிலிருந்து....

● மணிவிழாக்கண்டு மதுரகவி எனப் புகழ் பெற்றவர் தாங்கள். வளர்கின்ற புதிய தலைமுறையினருக்கு தங்கள் இலக்கிய வாழ்வுபற்றி கொஞ்சம் சொல்வீர்களா?

எனது இலக்கிய வாழ்வுபற்றி நிறையவே இக்காலத்தில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன.இதற்குக்காரணம் திரு எஸ்.திருச்செல்வம் தலைமையில் ரொறன்ரோவிலும் திரு.கவிதாராஜன் தலைமையில் மொன்றியலிலும்எடுக்கப்பெற்ற மணிவிழாக்கள்தாம். பிரபல எழுத்தாளர் திரு.எஸ்.ஜெகதீசன் என்னைப்பற்றி ஒரு நூலே எழுதியருக்கின்றார். 'கவிநாயகர்' என்ற பெயரில். என்னைப்பற்றி அறியவிரும்பும் இளந்தலைமுறையினர் இந்த நூலைப்படித்தல் நல்லது. மணிவிழா மலரிலும் பல தகவல்கள் உள்ளன. இவை யேர்மனியில் வளர்ந்துவரும் புதியதலைமுறையினருக்குக்கிடைத்திருக்க வாய்ப்பில்லாததால் சில தகவல்களை இனிய தமிழ் ஏடாகிய 'பூவரசு'வின் விருப்பத்துக்கமைய வெளிப்படுத்த வேண்டிவனாகின்றேன்.

1948ல் 'ஈழகேசரி' பாலர் பகுதியில் எனது முதல்கட்டுரை வெளியானது. அப்பொழுது சாவகச்சேரி இறிபேக் கல்லூரியில் நாண் ஒரு மாணவன். 1954ல் '1 1/2 ரூபாய்' என்னும் நாவல் வெளியிடப்பட்டது. மாத்தளையில் ஆசிரியராகப் பணிபுரிந்தகாலத்தில் மலைநாட்டுப்பகுதியில் பலவகையான இலக்கியமுயற்சிகளில் ஈடுபட நேர்ந்தது.1959ல் கவிஞர் சு.சொக்கநாதன், ஈழவாணன் ஆகியோருடன் சேர்ந்து மாத்தளை இலக்கிய வட்டம் என்னும் சங்கத்தை ஆரம்பித்தேன். இடமாற்றம்பெற்று யாழ்ப்பாணத்துக்குச் சென்றபின் அங்கும் யாழ். இலக்கிய வட்டம் என்னும் அமைப்பை இரசிகமணி கனக.செந்திநாதன் தலைமையில் உருவாக்க உழைத்தேன்.ஈழத்தமிழர் மத்தியில் இலக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஊர்கள்தோறும் இலக்கியவிழாக்களை யாழ்.இலக்கிய வட்டம் எடுத்தது. 1969க்கும் 1980க்கும் இடைப்பட்ட காலத்தில் எட்டு ஆண்டுகள் இலக்கிய வட்டத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டேன். யாழ். இலக்கியவட்டவெளியீடுகளாக உறுப்பினர்களின் பல ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டன. ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களையும் பத்திரிகைகளையும் வாங்கிப்படிக்கும்படி தீவிர பிரசாரங்கள் செய்திருக்கின்றோம். கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள், இலக்கியச் சொற்பொழிவுகள், நாடக அரங்கங்கள் என்று எனது இலக்கிய வாழ்வின்பெரும்பகுதி மக்களுடன் உறவாடிய வாழ்வாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

யேர்மனியில் அண்மையில் வெற்றிமணி நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற ,எழுத்தாளன், என்னும் படைப்புடன் எனது ஆக்கங்களாக 23 நூல்கள் வெளிவந்துள்ளன.

● இலக்கியத்தையே வாழ்வாகக்கொள்ள நினைப்பவர்களுக்கும், இலக்கியத்தை வாழ்வின் ஒரு அம்சமாகக் கருதுபவர்களுக்கும் தாங்கள் தரக்கூடிய ஆலோசனைகள் எவை?

எழுத்தில் மிகுந்த நிதானம் வேண்டும். எழுத்துச் சுதந்திரத்தை துர்ப்பிரயோகம் செய்தலாகாது. எதையாவது எழுதவேண்டும் என்பதற்காக எழுதலாகாது. மழைக்காலத்தில் முளைத்துக் கோடை காலத்தில் பட்டுவிடும் புல்பூண்டுப் படைப்புக்களில் நேரத்தை வீணாக்காது காலத்தை வெல்லவல்ல ஆக்கங்களைப் படைக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் உழைத்தல் வேண்டும். தனித்துவம் பேணப்படல் வேண்டும்.

- கடந்த சிலவருடங்களாக தாங்கள் கனடாவில் வாழ்ந்து வருகிறீர்கள் புலம்பெயர் வாழ்வில் உங்கள் கலை இலக்கிய அனுபவங்கள் எத்தன்மையானவையாய் இருக்கின்றன?

கனடாவிலே ஏறத்தாழ ஒரு இலட்சம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். ஈழத்திலே இலக்கிய நண்பர்களாக இருந்தவர்களும் என்னைத் தெரிந்த பிறரும் இங்கு வாழ்கின்றார்கள். அதனால் கலை இலக்கிய அனுபவங்களும் ஈழத்தைப்போலவே உள்ளன. அங்கு விட்ட இடத்திலிருந்து தொடர்வதுபோன்ற ஓர் உணர்வு. அதே கூட்டங்கள் அதே விழாக்கள். ஆனால் ஒரு முக்கியமான வேறுபாடு. இங்கு பத்திரிகைகள்,சஞ்சிகைகள்,மலர்வெளியீடுகள் அதிகம். கணனிவசதிகள் காரணம். ஆயினும் பலவற்றில் அறியாமைப்பிழைகளும் அச்சுப் பிழைகளும் அதிகம். இவை போகப்போகச் சரியாகிவிடும் என்பது என் நம்பிக்கை. இளம் எழுத்தாளருக்கு நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

- வளர்ந்த எழுத்தாளர்களையும் இன்று உருவாகிவரும்புதிய தலைமுறை எழுத்தாளர்களையும்பற்றிய தங்கள் கணிப்பு என்ன?

வளர்ந்த எழுத்தாளரின் ஆக்கங்களில் அமைதி, ஆழம், மரபு என்பவற்றைக் காணலாம். புதிய எழுத்தாளர்கள் இளையவர் முதியவரென இருவகைப்படுவர். இளையவரின் படைப்புக்களில் துணிவு, புதுமை என்பவை காணப்படினும் தமிழ் வளமும் சிந்தனைத்தெளிவும் அரிதாக உள்ளன. முதியவர்களின்எழுத்துக்களில் தமிழ் சுத்தமாக உள்ளது.

- *இப்போராட்ட காலத்தில் புலம்பெயர்ந்தோர்பற்றி தாயகமண்ணில் வாழும் கலை இலக்கிய ஆர்வலர்கள்மத்தியிலும் நல்ல அபிப்பிராயம் இல்லை என்பது அவ்வப்போது வெளிவரும் அவர்களது விமர்சனங்கள்மூலம் தெரிய வருகின்றது. இதுபற்றித்தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

நல்லதொரு கேள்வி. புலம்பெயர்ந்தவர்களின் அனுபவங்கள் அவர்களுக்கு இல்லாதிருக்கலாம். அல்லது விடுதலை உணர்வு வேகத்தில் அவர்கள் புலம் பெயர்ந்தவர்களைக் குறைக்கலாம். குறை கூறுகின்றவர்களை நான் குறை சொல்லமாட்டேன். போர்க்காலத்தில் புலம் பெயர்வு பொதுவானது, தவிர்க்க முடியாதது. சிந்துவெளியில் சிறப்பாக வாழ்ந்த தமிழர் தென்னாடு நோக்கிவந்ததும் போரால்.

பெரும்பாலான ஐரோப்பியர் அமெரிக்க நாடுகளில் குடியேறியதும் போரால். இன்று தமிழீழத்தைவிட்டு வெளியேறியபோதும் பெரும்பான்மையோரின் வாழ்க்கைமுறை தமிழீழத்தை மையமாகக் கொண்டே நடைபெறுகின்றது என்பதனை ஈழத்து விமர்சகர்கள் உணர்தல் வேண்டும்.

- *புலம்பெயர்ந்த நாடுகளில்வாழும் இலக்கியவாதிகள் நமது மண்ணையொட்டிய இலக்கியம் படைக்கும் அருகதையற்றவர்கள் என்பதாய் ஒரு கருத்து நமது மூத்த எழுத்தாளர்கள் பலரிடம் நிலவுகிறது. புலம்பெயர்ந்தோர் இலக்கியம்பற்றி அவர்களது படைப்புக்களிலும் அவதூறாகச் சித்தரிக்கப்படுகிறது. இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?*

படைப்பவன் உடலளவில் எங்கிருக்கின்றான் என்பதல்ல முக்கியம். அவனது உள்ளம் எங்கு இருக்கிறது என்பதே முக்கியம். இலக்கியத்துக்கு உடல்தொடர்பிலும்உள்ளத்தொடர்பே பிரதானமானது. எழுதுகின்றவர்கள் தமது முன்னைய அனுபவங்களை மையமாக வைத்தே எழுதுகின்றார்கள்.அவை மண்ணையொட்டிய சம்பவங்கள். இன்றும் தமிழீழத்தில் இருப்பவரிலும் வெளிநாட்டில் இருப்பவர்கள் தமிழீழ நிகழ்வுகளை விரைவில் அறிந்துவிடுகின்றார்கள். அவர்களது கனவும் நினைவும் தாயகமாகவே இருக்கின்றன. கேட்டதிலும் படித்ததிலும் தமது உள்ளத்தை ஊறவிட்டு உணர்ச்சிபொங்கப் பாடும் பல கவிஞர்கள் புலம்பெயர்ந்தநாடுகளில் உள்ளனர். புலம் பெயர்ந்தவர்களின் படைப்பு எவ்வளவுக்கு மண்ணையொட்டிய இலக்கியமாக இருக்கின்றது என்று மதிப்பீடு செய்வதுதான் முறை. அதனைவிட்டு அவர்கள் அத்தகைய இலக்கியங்கள் படைப்பதற்கே அருகதையற்றவர்கள் என்று கூறுவதற்கு யாருக்கும் அருகதை கிடையாது. அது ஒரு தாழ்வுச்சிக்கலைச் சார்ந்த இலக்கிய வாதம்.

- *புலம்பெயர்ந்தோர் மத்தியில் வெளிவரும் ஆக்கங்கள்பற்றி தாங்கள் எவ்விதமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்? மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று தாங்கள் கருதுகிறீர்களா? எவ்வகையில்?*

ஆக்கங்கள் என்பது கலை இலக்கிய,வரலாற்றுப் படைப்புக்கள் அனைத்தையும் குறிக்கும் ஒரு பொதுச்சொல். பிரபல ஓவியர் கண்ணா அவர்களின் ஓவியங்கள் யாவும் ஆக்கங்களே. இலண்டன் ராஜகோபால்அவர்களின் 'வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்', 'ஆழிக்குமரன்' ஆகிய நூல்களும், கனடா திரு எஸ்.கே.மகேந்திரன் அவர்களின் 'என்று முடியும் எங்கள் போட்டிகள்' திரு வ.நவரத்தினம் அவர்களின் 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' போன்ற நூல்கள் வரலாறு சம்பந்தமானவை. ஆனால் நீங்கள் இங்கு இலக்கியஆக்கங்களையே கருதியிருக்கிறீர்கள் என்பது விளங்குகிறது. இவையும் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்த ஆக்கங்கள். நூல்வடிவம்பெற்ற ஆக்கங்களென இருவகைப்படும். பல ஆக்கங்கள் தரமானவை என்பதே எனது கருத்து.

மாற்றங்கள் வேண்டும். ஆனால் மாற்றம் என்பது இலக்கிய உலகத்தில் சொல்லிச் செய்விக்க முடியாததொன்று. இன்று புலம்பெயர்ந்தோர் படைப்புக்கள் பெரிதும் தமிழீழம் சார்ந்ததாகவே இருக்கின்றன. அது இயல்பானது. தவிர்க்க முடியாதது. புலம்பெயர்ந்தவர்களுக்கென்று ஒரு வாழ்க்கை இருப்பதைப் பல எழுத்தாளர் இன்னும் சிந்திக்கத்தொடங்கவில்லை. அதுபற்றி எப்பொழுது சிந்திக்கத் தொடங்குகின்றார்களோ அப்பொழுது மாற்றம் இயல்பாகவே ஏற்படும். புதியசூழல் புதியபொருள்கள் என்ற வகையில் இலக்கியப்போக்கில் மாற்றம் ஏற்படவே செய்யும்.

● *ஒரு படைப்பாளி என்பவன் தான் படைக்கும் இலக்கியத்துக்கான சொந்த அனுபவங்கள் நிறைந்தவனாக இருந்தால்தான் அது காத்திரமான இலக்கியமாக முடியும் என்று சொல்லப்படுவதுபற்றி தாங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

இது எனக்கும் உடன்பாடானதே. சொந்த அனுபவங்கள் படைப்புக்குக்கனதியைமட்டுமன்றித்தனித்துவத்தையும் அளிக்கின்றன. ஆனால் வெறும் அனுபவங்கள் இலக்கியங்கள் ஆகமாட்டா. அவை கலைத்துவத்தோடு கையாளப்படும்பொழுதே இலக்கியமாகின்றன. அனுபவங்களும் பலவகை. ஒருவர் நேரடி அனுபவத்தால் உணராத ஒன்றை இன்னொருவர் கற்பனை அனுபவத்தால் உணர்தலும் கூடும் என்பதனைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

● *புலம்பெயர் மண்ணில் இருந்துகொண்டு நாம் படைக்கும் இலக்கியத்தால் நமது மொழிக்கோ நாட்டுக்கோ நாங்கள் எவ்விதத்தில் உதவக்கூடும் என்று தாங்கள் நினைக்கிறீர்கள்?*

புலம்பெயர்ந்த நாடுகளில், முக்கியமாக கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தமிழர்கள் ஆங்கிலத்தையே அதிகம்பேசுகிறார்கள். இந்த நிலைமையால் தமிழுக்கு வரக்கூடிய ஆபத்தை மக்களுக்கு உணர்த்தியும் தமிழின் மேன்மையை எடுத்துச் சொல்லியும் தமிழ் அபிமானத்தை ஏற்படுத்தும் வகையில் எழுதுகின்றவன் தமிழுக்கு உதவுகின்றவன் ஆகின்றான். தமிழீழத்துக்கும் எழுத்தாளர் பலவகையில் உதவலாம். இப்பொழுதுள்ள நிலைமையில் விடுதலை உணர்வைத் தூண்டவும் ஒற்றுமையை வளர்க்கவும் போரினால் கஷ்டப்படுவோருக்கும் அனாதைகளுக்கும் உதவவும் எழுத்தாளன் தனது பேனாவைப் பயன்படுத்தல்வேண்டும்.

● *வளர்கின்ற புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு ஒரு மூத்த தலைமுறை எழுத்தாளர் என்ற வகையில் தாங்கள் தரக்கூடிய அறிவுரை என்ன?*

வளர்கின்ற புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு வேண்டிய அறிவுரைகளை எனது 'எழுத்தாளன்' என்றநூலிலும் 'இலக்கியஉலகம்' என்னும் கவிதைத் தொகுப்பிலும் நிறையவே சொல்லியிருக்கிறேன். அவற்றை ஒருமுறைபடிக்குமாறு அவர்களைக்கேட்டுக்கொள்கிறேன்.

* *முதன்முறையாகத் தாங்கள் யேர்மனிக்கு வருகைதந்திருக்கிறீர்கள். கனடாவில் வாழ்கின்ற நம்மவர்களுக்கும் இங்குள்ள நம்மவர்களுக்குமிடையில் வாழ்க்கை முறையில் தாங்கள் எத்தகைய ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்கிறீர்கள்?*

யேர்மனியில் தமிழ்மக்கள் பரம்பல் ஐதாக உள்ளது. டோட்முண்ட்நகரத்தில்மட்டும் சற்று அதிகமாகக் காணப்படுகின்றனா. தூரத்தூர இருப்பதனால் மக்கள் சந்திப்பும் உறவாடலும் அடிக்கடி நடைபெறக்கூடிய வாய்ப்புக்கள் குறைவு. பலர் வேலை வாய்ப்பின்றி அரசாங்க உதவிப்பணத்தில் வாழ்கின்றனர். அதனால் பெற்றோர் பிள்ளைகளை நன்குபராமரிக்கின்றனர்.வீட்டில் தமிழைப் பேசுகின்றனர். வெளியிலும் தமிழரைக்கண்டால் தமிழிலேயே உரையாடுகின்றனர். அதனால் குழந்தைகளும் அழகான தமிழ்பேசுகின்றனர். தமிழை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வம் இங்கு அதிகம். உலகத்தமிழர் இயக்கம்மட்டும் 88 தமிழாலயங்களில் தமிழ் கற்பித்து வருகின்றது. பிற பாடசாலைகளும் உள்ளன. தமிழர் தனித்துவம் அங்கு பேணப்படுகின்றது.

கனடாவில் தமிழ்மக்கள் விரும்பிய இடங்களிற் செறிவாக வாழ்கின்றார்கள். சங்கம் சபைகள் அதிகம். சந்திப்புக்களும் கூட்டங்களும் அதிகம். வேலைசெய்வோர் தொகை அதிகம். தமிழ் கற்கும் ஆர்வம் குறைவு. கனடாவில் தமிழைப்படிப்பதனால் என்ன பயன் என்ற மனப்பான்மை பலருக்கு. கனடியமயமாவதில் பலருக்கு, குறிப்பாக இளம்சந்ததியினருக்கு ஆர்வம் அதிகம்.

மற்றும்படி உணவுமுறை, உடைவகை, நகை அணியும் ஆர்வம், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், சாமர்த்தியச் சடங்குகள், திருமண வைபவங்கள் போன்ற குடும்ப நிகழ்வுகளில் ஒற்றுமைகள் நிறையவே உள்ளன.

* *வெளிநாடுகளில் நமது படைப்புக்கள் பெருமளவில் வெளியாவது நல்லது என்று தாங்கள் கருதுகிறீர்களா? இவைகளின்மூலம் நாங்கள் நமது மொழியின் வளர்ச்சிக்கு உதவமுடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?*

நல்லது என்றே கருதுகிறேன். தரமான படைப்புக்கள் மொழியின் வளர்ச்சிக்கு நிச்சயம் உதவும்.

* *பூவரசுக்கு தாங்கள் தரக்கூடிய ஆலோசனைகள் என்ன?*

பூக்களுக்கு எல்லாம் அரசு பூவரசு. அது பத்திரிகைகளுக்கு எல்லாம் அரசாகிப் பவனிவரவேண்டும். பூவரசு வேலிவளவுக்குப் பாதுகாப்பாவதுபோல உங்கள் சஞ்சிகையும் தமிழர் பண்பாட்டின் கதிகாலாகத் தழைக்கவேண்டும். வாழ்த்துக்கள்.

# புல்லாங்குழல் ஊமையானது...!

என். சரோஜினி
(தமிழீழம்)



அன்னை இருந்தென்ன? தந்தை இருந்தென்ன? உடன்பிறப்புக்கள் இருந்தென்ன? உற்றதோழர்கள் இருந்தென்ன? அவள் இன்று அநாதைபோல் 'கோகுலம்' சிறுவர் இல்லத்தில் அன்னையாகப் பணிபுரிகிறாள்.

'இக் குழந்தைகளுக்குத்தான் அன்னை தந்தை இல்லை. ஆனால் எனக்கு...?' கண்ணீர் அவள் கன்னங்களைத் தழுவின. மேலே சிந்திக்க முடியாது.

□

பிருந்தாவனம்!

இது கிராமத்தின் பெயர். கிராமத்தை ஊடறுத்தோடும் பிருந்தாவனம் நதியின் கரையில்தான் 'கோகுலம்' சிறுவர் இல்லம் அமைந்திருந்தது.நதியின் மறுகரையில் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த மூங்கில்மரங்கள் தென்றலை இதமாக வீசிக் கொண்டிருந்தன. தாய், தந்தை அற்ற அநாதைச்சிறுவர்களை அன்புடன் அரவணைத்து அவர்களை வாழவைக்கும்பணியை பெருமனதுகொண்டு ஏற்றிருந்தது 'கோகுலம்' சிறுவர் இல்லம். இக்குழந்தைகளது வாழ்வில் விளக்கேற்றி வைப்பதே சிறுவர் இல்லத்தின் இலட்சியமாகும். பிரியந்தியும் தன்னை அப்பணியுடன் இணைத்து 5 ஆண்டாகப் போகிறது.

□

அவள் கோகுலத்திற்கு வரும்பொழுது அவள் குழந்தைகளுக்கு வயது மூன்றேதான். இன்று எட்டு வயதை எட்டிக்கொண்டிருக்கிறார்கள். காலம்தான் எவ்வளவு விரைவாக ஓடிவிட்டது.

அவள் சிந்தனையை குழந்தைகளின் சிரிப்பொலி தடுத்தது.நதியிலே நீராடிய அவள் குழந்தைகள், பிஞ்சுப்பாதங்கள் ஆற்றுமணலிலே புதைய அவளை நோக்கி "அம்மா" என ஓடிவந்தார்கள். பால்வடியும் அந்தப்பாலகர்களின் பாச முகத்தைப்பார்த்ததும் அவள் சோகங்களையெல்லாம்மறந்தாள்.இந்த அதிகாலைப் பொழுதிலே சுறுசுறுப்பாக இயங்கும் தனது குழந்தைகளை எண்ணிப் பெருமைப்பட்டாள். பெற்றால்தான் பிள்ளையா? அந்தப் பாசமழலைகளின் செழுமையான பேச்சில் தன்னையும் இணைத்துக்கொண்டாள்.

அன்பு, பாசம், பரிவு, இரக்கம், கருணை அத்தனைக்கும் அன்னையாக இருந்த பிரியந்தி படிப்பறையிலே அறிவுபுகட்டும் ஆசானாகமாறினாள். வீட்டிலே அன்னை, பள்ளியிலே ஆசிரியை. எத்தகைய ஒரு உறவு. அவள் குழந்தைகள் அனைவரும் படிப்பிலே சுட்டிதான். தமதுவீட்டு நினைவுகளை உறவுகளை மறந்து.அவர்கள் கவனம்கல்வியிலே சென்றது.படிப்பு முடிந்ததும் விளையாட்டு. ஆற்றங்கரையிலே ஒற்றுமையாக ஒன்றுசேர்ந்துவிளையாடும் தன்குழந்தைகளை ஆசையுடன் பார்த்துநிற்பாள். வீடு சென்றதும் மீண்டும் அன்னையாகிவிடுவாள். அவர்கள் மழலைப்பேச்சில் தன்னையும் இணைத்துக் கொள்வாள்.

□

அன்று கண்ணனின் பிறந்தநாள். அனைத்துக்குழந்தைகளுக்கும் ஒரே மாதிரி உடைகள். இனிப்புப் பண்டங்களை ஆசையோடு உண்டார்கள். அவனுக்குக் கொஞ்சம் துடுக்குத்தனம் அதிகம்தான். பள்ளிப்பாடத்தை அப்போதுதான் மீட்டான்.

"அம்மா....!எங்களுக்கு அம்மா,அப்பா,அக்கா, அண்ணா என்றெல்லாம் சொல்லித் தருகிறீர்களே! ஆனால் அப்பா...? அவரை நாம் கண்டதுமில்லைக் கதைத்ததுமில்லை. ஏன்?என்பிறந்தநாள் இன்றென்று தெரியாதாம்மா?அப்பாவை எனக்குப் பார்க்கணும்போல இருக்கே. அப்பாகூட நான் பேசணும்மா.."

— சிணுங்கினான் சிறுவன். பால்மணம் மாறாத அந்தப் பாலகனின் கேள்வியால் பிரியந்தி நடுங்கிப்போனாள். ஆமாம். அவன்கேட்பதும் சரிதானே.

'அம்மா இதோ, ஆனால் அப்பா....? அவன் — இல்லை அவர்கள் யாருமே கண்டதுமில்லைக் கதைத்ததுமில்லை.'

"என்னம்மா, நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். நீங்க பேசாதிருந்தால் எப்படி? ஏனம்மா என்னோடு நீங்க பேசவேமாட்டீங்களா?"

அவள் முகத்தைத் தன்பக்கம் திருப்பினான். அவன் கேள்வியால் பிரியந்தியின் விழிகள் கண்ணீரால் நிறைந்திருந்தன.

"என்னம்மா இது? ஏனம்மா அழுறீங்க? நான் சிறுபையன்தானே. தப்பாகக் கேட்டுட்டேனா?அம்மா நான் உங்கமகன்தானே.என்னை மன்னித்துவிடுங்கம்மா."

தன்னைச் சமாளித்து

"இல்லையே கண்ணா, ஆற்றுமணல்தான் கண்ணில் விழுந்துவிட்டது. அதுதான்.." என்று கூறிக் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

இரவு படுக்கச் சென்ற அவளால் தூங்கமுடியவில்லை. அன்று மாலை கண்ணன் கேட்ட அப்பா அவளைக் கண்மூடவிடவில்லை.

'ஏதோ அந்தநேரம் அப்படிக்கூறிவிட்டேன். ஆனால்....நாளையே எப்பம்மா அப்பா வருவாரென்று கேட்டால் என்ன பதில் சொல்வது?'

'அப்பா' என்றதும் அவன்.... ஏன் அக்குழந்தைகளின்முகத்தில் உண்டான சந்தோசத்தை எண்ணிப்பார்த்தாள். அவள் மனம் மகிழ்ச்சி கொண்டது. அப்பா வந்தாகணுமே இல்லையேல் அந்தப் புன்னகையை அவள் காணமுடியுமா?

'யார் அந்த அப்பா? அப்பா இருந்தால் அல்லவா விரைவில் வருவதற்கும், அவள் பாசமுகங்களின் புன்னகையைப் பார்ப்பதற்கும்.!' சிறுமனதிலே அவர்களது உணர்வுகளை எவ்வாறு மழுங்கடிக்கச் செய்யமுடியும்?'
அவளது சிந்தனைச் சிறகுகள் கடந்தகாலத்தை நோக்கிச் சிறகைவிரித்தன.

'அம்மா, அப்பா, உடன்பிறப்புகள் எனக்கிருந்தும் நான்தானே அவர்களைப் பிரிந்து இங்கு வந்தேன்? ஆனால் இக்குழந்தைகள் தம்மைப்பெற்ற அன்னை தந்தையைக் கண்டதுண்டா? கதைத்ததுண்டா? ஏதுமறியா இப்பிஞ்சு நெஞ்சங்கள் செய்த பாவம்தான் என்ன? கடவுளே இப்படியொரு நிலை யாருக்குமே வரக்கூடாது!'

'நானும்கூடக் கிருஷ்ணாபுரம் பாடசாலையில் எவ்வளவு சந்தோசமாகப் படித்துக்கொண்டிருந்தேன்?'
பல்கலைக்கழகம் புகுவதற்கான இறுதித்தேர்வு.
அவன் அதற்கு வராதது அவளுக்கு என்னவோ போல் இருந்தது. கல்வியிலே சிறந்துவிளங்கிய அவன் ஏன் வரவில்லை? பரீட்சையும் முடிந்தாயிற்று. அவள் என்ன எழுதினாளோ அவளுக்கே தெரியாது. அவள் மனம் அவனைக் காணத்துடித்தது. பேசத்துடித்தது. ஆனால் அவனைக் காணவில்லையே. அவன் அவளை நெருங்கியபோதெல்லாம் அவள் விலகிப்போனாள். ஏன்? எதற்காக? அவன், பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துத் தெரிவித்தால் "எனக்கு அதெல்லாம் தேவையில்லை" என்றாள். ஆனால் இப்போது.... அவனைக்காணத்துடிக்கிறது அவள் மனம்.

வேதனையின் கோடுகள் வீடு சென்றதும் படுக்கையில் விழவைத்தன. அவள் அண்ணன், "பிரகாஷ் வெளிநாடு போய்விட்டானாம். இங்கிருந்து சென்ற மறுநாளே சுகமாய்ப் போய்ச்சேர்ந்துவிட்டானாம். அதிஷ்டம் என்றால் அப்படியல்லவா இருக்கவேண்டும். நானும்தான் எத்தனைதடவை போய்த்திரும்பி வந்தேன். கிடைத்ததெல்லாம் அலைச்சல்தான்." அண்ணனின் வார்த்தைகள் அவள் செவியில் ஈட்டியெனப் பாய்ந்தது. இது உண்மையா? எனக்குக் கூடச்சொல்லாமற் சென்றுவிட்டாரா?

'காரணம் அவளுக்குப் புரியவில்லை. "உன் சுபாவம் என்னைக் கவர்ந்துவிட்டது. உன் இதயத்தில் எனக்கு இடம் தரமாட்டாயா? வாழ்ந்தால் உன்னோடு இல்லையேல் மண்ணோடு" என்று காதல் வசனம் பேசியவன் ஏன் எனக்குச் சொல்லாமற் போனான்?'
பிரியந்தியை மறந்துவிட்டானா? இல்லை, 'அவளுக்குத்தான் என்னைப் பார்க்கப் பிடிக்காதே. என்னுடன் பேசப்பிடிக்காதே.அதனால் எனக்குப் பிரியாவேவேண்டாம் என்று நினைத்துவிட்டானா? அவனைப் பார்க்கமறுத்தவள், கதைக்கமறுத்தவள் இன்று ஏன் அவனை நினைத்துக்கலங்கவேண்டும்.

அவள் தன்னையறியாமலே அவனை நேசிப்பதை அன்றுதான் உணர்ந்தாள். கலங்க வேண்டிய அவனே கலங்காமற் சென்றபின் அவள் ஏன் அவனை எண்ணிக் கலங்கவேண்டும். அன்றுதான் அவள் அந்த முடிவுக்கு வந்தாள். பிரகாஷ் இல்லாத கிருஷ்ணாபுரத்தில் தானும் இருப்பதில்லை என முடிவு செய்தாள்.எந்த அன்புக்காகவும் நேசத்துக்காகவும் அவன் ஏங்கித் தவித்தானோ? எந்தப் பிரகாஷை அவள் வெறுத்தாளோ? அவனை அவள் நேசித்தாள். அவனது காலடிச்சுவடுகள் பதிந்த கிருஷ்ணாபுரத்தில் இருந்து வெளியேறினாள். அதன் பலன்தான் இன்று அன்னை, தந்தை, உற்றார், உறவினர், உடன்

பிறப்புக்கள் அனைவரையும் மறந்து பிரிந்து அவள் பிருந்தாவனம் வந்தது.

அவளது சிந்தனைகளைத் தடுப்பதுபோல கண்ணன் "அம்மா" என முனகியவாறு எழுந்தான். அவள் அன்போடு அவனை அணைத்தவாறு அவனருகில் படுத்துவிட்டாள்.

□

வெளிநாடு சென்ற பிரகாஷ் தான் செய்தது சரியா என பலமுறை எண்ணினான். ஆனால் விடைதான் கிடைக்கவில்லை. "பிரியந்தியிடம்கூடச் சொல்லாமல் வந்துவிட்டேனே. என்னைப்பற்றி என்பாசத்தைப்பற்றி என்ன நினைப்பாள். திரும்ப நான் கிருஷ்ணாபுரம் போகும்போது எனக்காகக் காத்திருப்பாளா... இல்லை வேறுயாரையாவது....சீ....இது என்ன வேண்டாத சிந்தனை. நான் சொல்லாவிட்டால் என்ன. அவள் என்னை மறக்கமாட்டாள்" என அவன் நெஞ்சம் எண்ணியது.

□

பிருந்தாவனம் நதிக்கரையில் அவள் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். கண்ணன் "அம்மா! வருகிற ஆண்டுவிழாவிற்காவது அப்பா வருவாரா? அப்பாவையும் வரச்சொல்லிக் கடிதம் எழுதுங்கம்மா. அப்பாவைப் பார்க்கனும்மா. பேசனும்மா" எனக் கூறியவனின் கண்கள் கலங்கின.

அவள் அவனை அழைத்து "அழாதேடா கண்ணா, வரமுடியுமானால் அப்பா நிச்சயம்வருவார். கவலைப்படாதே" என்றாள்."அம்மா, மறந்திடாமல் அப்பாவிற்கும் கடிதம் போட்டிடுங்க" என மகிழ்ச்சியோடு கூறினான்.

அறியாப் பருவத்தின் உணர்ச்சிகளை மதிக்கத்தான் வேண்டும் என்னும் உண்மையை உணர்ந்தாள். இத்தனை குழந்தைகளும் கேட்காதிருக்க இவன் மட்டும் ஏன் அப்பா என உருகுகிறான். அவன் அம்மாவும் அப்பாவும்தான் அவனை அநாதையாக விட்டுச் சென்றுவிட்டார்களே. அவன் ஏன் அப்பா எனத் துடிக்கிறான்? அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

பெரியவர்களின் தவறுக்கு இளையவர்கள் தண்டிக்கப்படுவது என்ன நியாயம்? பாவம். அநாதையான அவர்களை அன்புகாட்டி வளர்த்த அவள் என்ன செய்வாள்?

'அப்பா....அவர் எங்கே இருக்கிறார் கடிதம் எழுத....?'

□

அவள் நினைவுகள்...!

அப்பா என்ன செய்கிறாரோ?

'எங்கே என்று சொல்லாமல் ஓடிப்போனவள் தானே! அவளைத் தேடவேண்டாம் என்றிருப்பார். அம்மா! அழுதகண்களும் சிந்தியமூக்குமாகச் சில நாட்கள் இருந்திருப்பார். அண்ணா! 'அவள் யாருடன் ஓடினாளோ? என் மானமே கப்பலேறிவிட்டது' எனக் கொதித்திருப்பான். உற்றார், உறவினர், ஊரவர்கள் எல்லாம் 'அவள் யாரோ ஒருவனுடன் ஓடிவிட்டாளாம்' என்று காது,மூக்கு வைத்து நாலுநாட்கள் கதைத்திருப்பார்கள்.சிரித்திருப்பார்கள். ஆனால் இப்போ.... 5 ஆண்டாகப் போகிறது அவள் பிருந்தாவனம் வந்து. மொத்தத்திலே எல்லோருமே அவளைமறந்திருப்பார்கள்.கிருஷ்ணாபுரத்திலிருந்து பிருந்தாவனம் என்ன நெடுந்தூரமா? மிஞ்சிமிஞ்சிப் போனால் 50 மைல்தான். அவள்

நினைத்தால் கிருஷ்ணாபுரம் போயிருக்கலாம். ஆனால் அவள்தான் நினைக்கவில்லையே.

அன்னையின் நினைவுகள் அவள் நெஞ்சை அலைஅலையாக நிறைத்தன. "அம்மா.... எனக்குக்கூட உங்களைப் பார்க்கணும்போலத்தான் இருக்கு. ஆனால்! ஏதோ ஒன்று உங்களைப் பார்க்கத் தடுக்குதே. அது என்னம்மா? ஐந்து ஆண்டுகள் நீங்க எப்படியம்மா இருக்கிறீங்க? உங்க பிரியா இறந்துவிட்டாள் என்று எண்ணுகிறீர்களா? இல்லையம்மா. அவள் இன்னும் உயிருடன்தான் நடைப்பிணம்போல் உலவுகிறாள். அன்னையின் அணைப்பிலே படுத்துறங்கியவள் இன்று அன்னையாகத் தன் குழந்தைகளை அணைத்துக்கொண்டு படுத்து உறங்குகிறாள். இதுதானம்மா வித்தியாசம். மற்றும்படி அவள் என்றும் பழைய பிரியாதான்.

அன்னையின் நினைவுகளால் அவள் விழிகள் நதியாயின. கன்னங்களைத் தழுவிய கண்ணீர் பிருந்தாவனம்நதியிலே முத்துமுத்தாக விழுந்தது. "அம்மா...உங்க கரம் துடைக்கவேண்டிய என்கண்ணீர் பிருந்தாவனம் நதியிலே சங்கமமாகிறது". அவள் தன்னை மறந்து நெடுநேரம் அழுதாள்.

□

தாயகம் போகும் சந்தோஷம் பிரகாஷை இறக்கைகட்டிப் பறக்கவைத்தது. அன்னைக்கும் அவளுக்கும் தேவையான பொருட்களைத் தேடித்தேடி வாங்கினான். தோழர்களிடம் விடைபெற்று பயணமானான் பிரகாஷ்.

□

கிருஷ்ணாபுரம்வந்த பிரகாஷிற்கு பைத்தியமே பிடித்துவிடும்போல் இருந்தது. யாரைப்பார்க்கணும், பேசணும், யாரை மீண்டும் வெளிநாட்டிற்கு அழைத்துப் போகணும் என்று நினைத்தானோ, அவள் அங்கில்லை என்றதும் துடித்தான். தவித்தான். "அவள் காணாமற் போனது நான் சென்ற சில நாட்களிலா! ஓ....! அப்படியென்றால்....! இப்போ உன்னை எங்கே தேடுவேன் பிரியா? உன் மனம் எனக்கு அன்று தெரிந்திருந்தால் உனக்கு நான் நிச்சயம் சொல்லித்தான் சென்றிருப்பேன். ஆனால், உனக்குத்தான் என்னைப் பார்க்கப் பிடிக்காதே, பேசப்பிடிக்காதே. அதனால்தான் உன்னைவிட்டு நீண்டகாலம் பிரியப்போகிறேனே என்று தெரிந்தும், உன் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ளக்கூடாதென்றுதான் சொல்லாமற் சென்றேன். அதற்காக ஊரைவிட்டே நீ ஓடவேண்டுமா? என்றாவது ஒருநாள் உன் பிரகாஷ் கிருஷ்ணாபுரம் வருவானென்று நீ ஏன் பிரியா எண்ணவில்லை. இப்போ நீ எங்கே பிரியா? என்னை நீமறந்தேவிட்டாயா? நான் உன்னை மறக்கவில்லைஉன் நினைவுகள்தான் என்இதயத்தில் நிறைந்து வழிகின்றன. என்னை இப்போதாவது உன்னால் புரிந்துகொள்ளமுடியுமா பிரியா?

பத்திரிகையில் இருந்த விளம்பரத்தைப் பார்த்த பிரகாஷின் மூளை வேகமாக வேலை செய்தது. "கோகுலம்" சிறுவர் இல்லம். ஆமாம். யாருக்காக இங்கே அவன் ஓடிவந்தானோ, அவளே இல்லை என்றபின் அவனுக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை. விரைவிலேயே கிருஷ்ணாபுரத்தை விட்டு வெளியேறத் தயாரானான்.

□

சித்திரைத் திங்கள் 10ம் நாள். "கோகுலம்" சிறுவர் இல்லம் விழாக்கோலம் பூண்டிருந்தது. அரங்கின் முன் வந்த பிரகாஷ் மேடையில் "அம்மா அம்மா

கவலை வேண்டாம். அப்பா வந்தார் பாரு. அன்புடன் நம்மை அணைத்திட வந்தார். கண்ணைத் திறந்து பாரு....." என்று பாடிய சிறுவனின் கானமழையில் நனைந்தன அவன் செவிகள். அவனது விழிகள் கலங்கின. ஏன்?

பிரகாஷ் வந்ததைக்கண்ட பிரியந்தி திடுக்குற்றாள்.

'இவன் எங்கே? எப்போது வந்தான்?' பிரகாஷின் கலங்கிய விழிகளைக் காணச் சகிக்காது தனது வீட்டை அடைந்தாள்.

உணவைப் பரிமாறிமுடித்தவள் "சாப்பிடுங்கள்" என நிமிர்ந்தாள். அறை வாயிலிலே பிரகாஷ், அவளையே பார்த்துக்கொண்டிருந்ததை அப்போதுதான் உணர்ந்தாள். அருகே இல்லத்தலைவி. கண்ணன் "அப்பா வந்தாச்சு" என அவனை நோக்கி ஓடினான். "இது அப்பா இல்...." என்று தொடங்கிய இல்லத்தலைவியை இடைமறித்த பிரகாஷ், "சிறுகுழந்தைகள், அவர்களுக்கு என்னம்மா புரியும்"

கண்ணன் அவன் கரங்களைப் பற்றி "அப்பா,வாங்க சாப்பிடுவோம். இப்போதானா வந்தீங்க? நான்கூட இன்று பாட்டொன்று பாடினேனே. நீங்க கேட்கவில்லையா? ஏனப்பா, இத்தனை நாட்களும் எங்கே இருந்தீங்க? இனி நாங்க அப்பாவை விடமாட்டோம்". மற்றக் குழந்தைகளும் அவனைச் சூழ்ந்தன.

இல்லத்தலைவி, "பரவாயில்லை. நீங்க இவர்களுடன் சாப்பிட்டுவிட்டு வாங்க. நான் வருகிறேன்" என்று கூறிக் கொண்டே போய்விட்டார்.

உள்ளே வந்த பிரகாஷ் பிரியந்தியைப் பார்த்தான். அவளது விழிகள் அனலை வீசிக்கொண்டிருந்தன. 'யாரோ அநாதை என்றும் பாராது அன்புவைத்துப் பாசங்காட்டிப் பண்போடு தன் பிள்ளைபோல வளர்த்தாளே. இன்று யாரோ ஒருவனை அப்பா என்றழைத்து அவருடன்தான் சாப்பிடுவேன் என்று அடம்பிடிக்கிறானே. இவனை....' அவள் நெஞ்சம் ஆத்திரத்தாற் கொதித்தது. "கண்ணா" என ஆத்திரத்துடன் அழைத்தாள். அப்பிஞ்சு உள்ளங்கள் பயத்தால் நடுங்கின.

அன்பான வார்த்தை, அன்பான பார்வை இவை தவிர வேறெதனையும் அவளிடமிருந்து அவர்கள் இதுநாள் வரைப்பெற்றதில்லை. ஆனால் இப்போ? நிலைமையை அறிந்த பிரகாஷ் சிரித்துக்கொண்டே, "காரணமில்லாமல் நீ குழந்தைகளிடம் கோபித்துக்கொள்ளாதே பிரியா. அவர்கள் உணர்ச்சிகளுக்காவது மதிப்பளித்துவிடு. பின்னர் நாம் பேசிக்கொள்ளலாம்".

"இத்தனை காலமாய் அன்போடு அரவணைத்துப் பாசத்தோடு உணவூட்டிய அன்னை அருகில் இருக்கிறாளே என்ற எண்ணமே இல்லாமல் அப்பா என்கிறார்களே!" அவள் நெஞ்சம் எண்ணியது.

என்ன நினைத்தாளோ? பிரியந்தியின் வதனம் புன்னகையால் மலர்ந்தது. "சாப்பிடுங்கள்" என்று அன்போடு உபசரித்தாள். "அழவேணாம் கண்ணா. இதோ உன் அப்பா உனக்காகப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இனிமேல் நான் அப்படியெல்லாம் கோபப்படமாட்டேன்" என்று சிரித்தபடி அவனை அணைத்துப் பிரகாஷிற்கு அருகில் அமர்த்திவிட்டாள்.

பிரகாஷின் முகத்தையே அன்போடு ஆசையாகப் பார்த்தார்கள் குழந்தைகள். அந்தப் பூமுகங்களின் புன்னகையால் அவன் மனம் குளிர்ந்தது.

"எத்தனை மகிழ்ச்சியோடு குழந்தைகள் காணப்படுகிறார்கள். அப்பா என்றதும் இத்தனை மகிழ்ச்சியா? உண்மையாகப் பெற்ற அப்பாவாக இருந்தால் எப்படியிருக்கும்?" பிரியந்தியின் மனம் எண்ணிக் கொண்டது.

குழந்தைகள் வழக்கம்போல் நதிக்கரைக்குப் போகத் தயாராயினர். "அப்பா

நீங்களும் வாங்க". "நான் அம்மாவையும் அழைத்துவருகிறேன். நீங்கள் போய் விளையாடுங்கள்" என அவர்களை அனுப்பிவைத்தான்.
"பிரியந்தி நீ சாப்பிடவில்லையா?" "நான் சாப்பிடுவேன் விடுவேன். அதையெல்லாம் கேட்க நீங்க யார்?" பிரியா ஆத்திரத்தால் படபடத்தாள். அவளது விழிகள் நிறைந்தன. "பிரியா..நீ எதற்காக இப்போ கண் கலங்கணும். அழாதே பிரியா. நான் போகிறேன். ஆனால் போகுமுன் உன்னுடன் தனிமையில் கொஞ்சம்பேசவேண்டும். அதைமட்டும்மறுத்துவிடாதே.என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. இன்று மாலை பிருந்தாவனம் நதிக்கரைக்கு எனக்காக வந்துவிடு" என்று கூறியவன் மௌனமாக வெளியேறினான்.
அவளுக்கு அழுகைஅழுகையாக வந்தது. தன் மனம் அமைதிகாணுமட்டும் அழுதாள்.
"நீங்க ஏன் இப்போ கலங்கணும். அதை மட்டும் மறுத்துவிடாதே" என்ற அவனது வார்த்தைகள் அவள் செவியிலே அலைமோதியது.
'உண்மையில் எனக்காகத்தான் பரிதாபப்படுகிறீர்களா? நிச்சயமாய் இருக்காது. போகும்போது சொல்லிவிட்டுப் போகத்தெரியாதவர் இப்போ மட்டும் என் நிலையை எண்ணிக் கலங்குவாரா?'

மாலைநேரம் பிருந்தாவனம் நதிக்கரைக்கு வந்தாள் பிரியந்தி. அவன் ஏற்கனவே அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவள் அவனை நெருங்கினாள். ஆனால் அவன் எதுவுமே பேசவில்லை. அவள்தான் முதலில் "தனிமையில் பேசவேணும் என்றீர்களே! இப்போ ஏன் இந்த மௌனம்." அவளை நிமிர்ந்து பார்த்தான். விழிகள் கலங்கிச் சிவந்திருந்தன. சற்றுமுன்தான் அழுதிருப்பான்போல் இருந்தது. "எங்கே அவளைப் பார்த்தால் மீண்டும் அழுதுவிடுவேனோ" என்றெண்ணி தன் பார்வையை நதிமீது செலுத்தினான்.
"பிரியா, உன்னைக் காண்பதற்காக, உன்னையும் என்னுடன் மீண்டும் அழைத்துச் செல்வதற்காக நான் வெளிநாட்டில் இருந்து வந்தேன். ஆனால் உன்னை அங்கே காணவில்லை. உன்னைக் காணாமல் நான் தவித்த தவிப்பு உனக்குத் தெரியுமா? சொல் பிரியா. நீ எதற்காகக் காணாமற் போகவேண்டும்? இன்று உன்னை இங்கே சந்திப்பேனென்று நான் கனவிற்கூட நினைக்கவில்லை. நீ இல்லாத அந்தக்கிருஷ்ணாபுரத்தில் நானும் இனிமேல் இருப்பதில்லை என்று முடிவுசெய்தேன். உனக்காகக்கொண்டுவந்த பொருட்களை விற்றுப் பணமாக்கி கோகுலம் இல்லத்திற்கு ஏற்கனவே கொடுத்துவிட்டேன்.ஆண்டு விழாவில் உன்னைக்கண்டதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஐந்து ஆண்டுகளுக்குமுன் காணாமற்போன உன்னைக்கண்டுபிடித்து விட்டேனல்லவா. அதனால்தான்! ஆனால் நீதான் முன்புபோல் இல்லையே. கல்லூரியில் நீ படிக்கும்போது இருந்த துடுக்குத்தனம் எங்கே பிரியா?உன் விழிகளைச் சுற்றிக் கருவளையங்கள் எதற்காக? ஏன் உன் உடல்கூட மெலிந்து கறுத்துவிட்டதே! சொல் பிரியா, என்னுடன் கதைக்கக்கூடாதென்று முடிவு செய்து விட்டாயா? உன் நினைப்பு நியாயமானதுதான்...."
"நியாயம் எது அநியாயம் எது என்று பேசுறீங்களா? அன்று ஏதுமறியா வெள்ளை மனம் கொண்ட என்னை நோகவைத்துச் சென்றீர்கள். நான் மட்டும் ஏன் காணாமற் போனேன் என்று சொல்லவேண்டுமா? நீங்க போகும்போது சொன்னீர்களா பிரகாஷ்? இந்தப் பிரியா வேண்டாம் ஏன் கிருஷ்ணாபுரமே வேண்டாம் என்றுதானே சென்றீர்கள். இப்போ ஏன் இந்தப் பிரியாவைத் தேடுகிறீர்கள்? கல்லூரிநாட்களிலே எவ்வளவு இனிமையாகப் பழகநினைத்தீர்கள்.

ஆனால்...வெளிநாடென்றதும் அதையெல்லாம் மறந்தீர்களே பின் ஏன் பிரகாஷ் இன்று?"

துயரம் தாளாது அவள் உதடுகள் துடித்தன.

"பிரியா..நான்...?"

"வேண்டாம் பிரகாஷ்...இனிமேல் நீங்க எதுவுமே செய்யவேண்டாம். இந்தப் பிருந்தாவனம் நதியைப் பாருங்க... இதில் இருக்கும் கற்கள் கறுப்பாகத்தான் இருக்கின்றன. ஆனால் என்றுமே ஆற்றுநீரால் கழுவப்பட்டு சுத்தமாகத்தான் இருக்கின்றன.இந்த மூங்கில்மரங்களைப் பாருங்க..இவையெல்லாம் என்றாவது ஒருநாள் புல்லாங்குழலாக மாறும் என்ற நம்பிக்கையிலா வளர்ந்துள்ளன. இல்லையே!அதேபோல் நீங்களும் இந்தப் பிரியாவைத்தேடி என்றாவது ஒருநாள் வருவீர்களென்று நான் கனவிற்கூட நினைத்ததில்லை. என்னை நான் முழுமையாக இச்சிறுவர்களுக்காக அர்ப்பணித்து ஐந்து ஆண்டாகிவிட்டது. ஏன் நீங்கதான் உங்கள் அன்புக்குரியவளுக்குக்கூடச் சொல்லாமற் சென்றீர்களே! தயவுசெய்து என் இருப்பிடத்தை யாருக்கும் சொல்லி விடாதீங்க. இறுதியும் முதலுமாக நான் உங்களிடம் கேட்பதெல்லாம் இது ஒன்றேதான்.!"

பிரகாஷ் தன் காதுகளையே நம்பமாட்டாது அவளைப் பார்த்தான்.

"உன் முடிவை எனக்காக மாற்றிவிடு பிரியா!"

"பிரகாஷ்... ப்ளீஸ்... என்னை மன்னித்துவிடுங்கள். என் முடிவை நான் இப்போ மாற்றத் தயாரில்லை.!"

"இப்போ மட்டும்தானே?... நாளை மாற்றிவிடுவாய்தானே? நீ என்னுடன் வெளிநாட்டிற்குக் கூடவா வரவி...?

"என் முடிவைத் தெரிந்துவிட்டீர்கள்..இன்னும் ஏன்? நீங்க சந்தோஷமாகப் போய்வாருங்கள்! என்னைப் போல் எத்தனையோ பிரியாக்கள் உங்களிற்கு...!"

"பிரியா.. யாருடன் பேசுகிறேன் என்பதை நினைத்துப் பேசு.... அன்பான வார்த்தைகளால் வருட வேண்டிய என் இதயத்தை உன் சொல்லம்புகளாவது துளையிட்டுக் கொல்லட்டும் அதை நினைத்தாவது நான் பெருமைப்படுவேன்"

"பிரகாஷ்! இப்படியெல்லாம் பேசிவிட்டால் என்மனம் மாறிவிடாது. இந்தப் பிரியா ஊமையாகிவிட்ட புல்லாங்குழல். இதில் இனி இசையைக் கோர்க்க முடியாது. பிரகாஷ். என் வாழ்நாள் எல்லாம் இச்சிறுவர்களுக்குத்தான்!"

"பிரியா. இதுவும் ஊமையாகிவிட்ட புல்லாங்குழல்தான். இதில் பிரியாவின் பிரியமான இசையைத்தவிர வேறெந்த இசையையும் கேட்க முடியாது.''

## தேவை ஒரு சிறுகதை
## அல்லது கவிதை!

இந்த இதழின் அட்டைப்படம் உங்களுக்குத் தோற்றுவிக்கும் உணர்வுக்கேற்ப ஒரு சிறுகதையை அல்லது கவிதையை எழுதுங்கள்! 25.10.95க்கு முன்பு கிடைக்கத்தக்கதாக அனுப்பிவையுங்கள்!

## வாசகர் தகைமை

வாசகர் இன்றி எழுத்தாளன் இல்லை. வாசகர் படித்து இரசியாத படைப்புக்கள் வெறும் எழுத்துக் குவியல்களே. எழுத்தாளனின் பெயரும் புகழும் வாசகர் அவனது எழுத்துக்குக் கொடுக்கும் மதிப்பைப் பொறுத்தது.

சில எழுத்தாளருக்கு வாசகர் தொகை அதிகமாக இருக்கும்; சிலருக்குக் குறைவாக இருக்கும். தொகையை வைத்துக் கொண்டு எழுத்தாளனின் ஆக்கத்தின் தரத்தை எடைபோட முடியாது. தொகையிலும் வாசகரின் தகைமையே முக்கியமானது.

ஆக்க இலக்கியப் படைப்புக்களை இரசிப்பதற்கு வாசகர்களுக்கும் சில அடிப்படைத் தகைமைகள் இருத்தல் வேண்டும். ஆழமான அறிவு மிகுந்தவர் இரசனைக்கும் அற்ப அறிவுடையோர் இரசனைக்கும் நிறைய வேறுபாடு உண்டு.

கிறிக்கெற் விளையாட்டின் விதிமுறைகளை அறியாதவர் அதனை முறையாக இரசிக்க மாட்டார்கள். அதுபோலவே இலக்கியத்தின் இயல்புகளை அறியாதவர் இலக்கியப் படைப்புகளைச் செவ்வனே சுவைத்துப் படிக்க மாட்டார்கள்.

வாசகரின் இரசனைத் திறனை நன்கு அறிந்து கொண்டு அதற்கேற்பப் பல எழுத்தாளர்கள் எழுதுவதுண்டு. மாறாக, தமது கொள்கைக்கும் பாணிக்கும் தகுந்தவாறு வாசகர்களை வளைத்தெடுக்கும் எழுத்தாளர்களும் உளர்.

வாசகர்களின் இரசனைத் திறன் மட்டமாக இருப்பினும் அவர்களது தரத்துக்குத் தக எழுத்தாளர்கள் இறங்கி எழுதுதல் வேண்டும் என்கின்ற வாதம் எனக்கு உடன்பாடில்லை. அப்படித்தான் இறங்கி எழுதினாலும் படிப்படியாக அவர்களது இரசனைத் திறனை வளர்த்தெடுக்க வேண்டியது எழுத்தாளன் கடமை என்றே கருதுகிறேன்.

மட்டமான இரசனை என்று நான் கருதுவது சாதாரண மனித இச்சைகள் பற்றிய இரசனையை. மனிதனிடத்தில் இருக்கும் மிருகத் தனங்களை வளர்ப்பது எழுத்தாளனின் நோக்கமாக இருத்தலாகாது.


வாசகர் விரும்புவதை வழங்குதலிலும் வாசகர் தேவைகளை வழங்கு

பவனே இலட்சிய எழுத்தாளன். மனிதத்துவத்தையும் உயர்ந்த இலட்சியங்களையும் போற்றும் எழுத்துக்களே நின்று நிலைக்க வல்லன. நல்ல இயல்புகள் சார்ந்த இரசனையே இலக்கிய இரசனை யாகும்.

ஈழத் தமிழர் மத்தியில் தரமான பல எழுத்தாளர்கள் இருந்தும் வாசகர் தொகை குறைவாக இருப்பது கவலைக் குரியதொன்று. பொதுவாகவே வாசிப்புப் பழக்கம் ஈழத்துத் தமிழ் மக்களிடம் மிகவும் குறைவு. வாசிப்புப் பழக்கம் உள்ளவர்களும் வாசிகசாலை அல்லது நூல்நிலைய மட்டத்தில் நின்று விடுகின்றார்கள். பணம் கொடுத்து வாங்கிப் படிக்கும் அளவுக்கு ஆர்வம் வளரவில்லை. கனடாவில் இலவசமாகப் பல பத்திரிகைகள் விநியோகிக்கப்படுகின்றன. அவற்றின் பெயர்களைத்தானும் அறியாதவர் நூற்றுக்கணக்கில் உள்ளனர்.

நம்மவர்கள் மத்தியில் வாசிப்புப்பழக்கம் குறைவாகவுள்ளமைக்குரிய காரணங்கள் பல. அவற்றுள் மூன்று பிரதானமானவை:

(1) பாடசாலை நிலையிலும் குடும்பச் சூழலிலும் வாசிப்புப் பழக்கத்துக்கு முக்கியத்துவம் கொடாமை.
(2) விற்பனையைத் தூண்டவல்ல போதிய பிரசாரங்கள் செய்யாமை.
(3) கவர்ச்சியான முறையில் நூல்களை வெளியிடும் நிறுவனங்கள்/வசதிகள் இல்லாமை.



கவிஞர் வி.கந்தவனம் அவர்களின்
எழுத்தாளன் நூலிலிருந்து!

*சந்திப்போம் சிந்திப்போம் என்னும் இந்தப் பகுதியில் பூவரசில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான விமர்சனங்கள் படைப்பாளர்களின் பதில்களுடன் இணைத்து வெளியிடப்படும். கருத்துமேடையாக இந்தப்பகுதியைப் பயன் படுத்திக் கொள்ள வாசகர்களை அழைக்கிறோம்.*

---

சென்ற இதழில் வெளியான தமிழ்க்குருவியின் விமர்சனத்திற்குப்
**பதில் தருகிறார் படைப்பாளர் திரு.ஸ்ரீதாஸ் —**

திரு தமிழ்க்குருவி அவர்களுக்கு!
தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றேன்.
ஒரு எழுத்தாளனை விமர்சிக்கவும் குறைகளைச்சுட்டிக்காட்டவும் ஒரு வாசகருக்கு உரிமையுண்டு. அதேசமயம் விமர்சனத்திற்கு மதிப்பளிக்க வேண்டியது எழுத்தாளனின் கடமையாகிறது.
எழுத்துச் சுதந்திரங்கள் மறைக்கப்படக்கூடாது என்ற நோக்கோடு பூவரசு படைப்பாளிகளின் எழுத்துச் சுதந்திரத்துக்கு மதிப்பளித்து வருகின்றது. இந்த வகையில் பூவரசால் எனக்கு அனுப்பிவைக்கப்பட்ட தங்கள் கடிதத்திற்கும் பதிலளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
நண்பரே!
எழுத்தாளன் என்பவன் தான்தோன்றித்தனமாய் ஒருகருத்தைச் சொல்லமுடியாது. தன் கருத்தைச் சொல்வதோடுமட்டும் நின்றுவிடாது.
தான்சொல்லவருகின்ற கருத்தோடு தான்ஒத்துப்போக முடிகிறதா? இந்தக் கருத்தோடு மற்றவர்கள் ஒத்துப்போகமுடியுமா? நடைமுறையில் இது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பவற்றையெல்லாம் ஆராயவும்வேண்டும். வாழ்க்கையில் நாம்காணக்கூடிய நடைமுறைச்சம்பவங்களை — அதிலும் பெண்ணிற்கு இழைக்கப்படும் அநீதிகளை அவர்களது அறியாமைகளைத்தான் எனது கட்டுரையில் நான் குறிப்பிட்டிருந்தேன். புரையோடிப் போயிருக்கும் எம் பழக்கவழக்கங்கள் மாறவேண்டும் என்ற ஒரு மனப்பாங்குடன்தான் எழுதினேன். தங்கள் விமர்சனத்தில் கோபம் தொனிக்கிறது.
ஆனாலும் தங்களது கருத்துக்கள் சிலவற்றோடு என்னால் ஒத்துப்போக முடியவில்லை.

நிறைவாகும்வரை மறைவாக இருக்க வேண்டும் என்கின்றீர்.
அப்படியாயின் மறைந்திருந்து வேடிக்கைபார்ப்பதுதான் தங்கள் வேலையோ? என்ன நிறைவைக் காணவேண்டும்? நல்ல கருத்துக்கள் சிதைந்து போக வேண்டும் என்றுதான் தாங்கள் கருதுகிறீர்களா? நீங்கள் உங்கள் வட்டத்தில் நிற்க விரும்புகிறீர்கள். சுற்றி நிற்பவைகள் தேவையில்லைஎன்பதுதானே தங்கள் கருத்து?

**சந்திப்போம்! சிந்திப்போம்!**

ஜாதியாலோ பணத்தாலோ நியாயமற்ற சட்ட திட்டங்களாலோ பரம்பரைக் கௌரவம் பாதுகாக்கப்படக்கூடாது நல்ல பழக்கவழக்கங்களால்தான் பரம்பரைக் கௌரவம் காப்பாற்றப்படவேண்டும் என்பது என்கருத்து.

நண்பரே! எமது கலை கலாச்சாரங்கள் பாரம்பரிய வழிமுறைகள் எல்லாம் தீயவழிகள் என்று யார்சொன்னது? அவற்றில்புகுந்துள்ள தீயவழிமுறைகள்தான் அகற்றப்படவேண்டும். பிற்போக்குத்தனமானஎண்ணங்கள் கைவிடப்படவேண்டும்.

நண்பரே! முன்னோர்கள் சொன்னவைகள் தவறானது என்ற கருத்துக்கு நான் வரவில்லை. நல்லவைகளையும் இட்டுத்தான் சென்றிருக்கிறார்கள்.அவைகளை நாம் காக்கத்தான் வேண்டும். அதற்காக அவர்கள் சொன்ன எல்லாவற்றையுமே ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் என்ற கட்டாயமில்லை.

நண்பரே! ஜாதிகள் ஒழியவேண்டும் என்று சொல்லும் அதே வேளையில் ஜாதி உலகத்தில் அவசியமென்றும் கூறுகின்றீர். இது என்ன தடுமாற்றம்? எம் எண்ணங்கள் முரண்பட்டு நிற்கின்றன.

பாரதியும் பாடினான் —

ஜாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.

அன்று பாடிய பாரதியின் பாட்டை மதித்தோமோ இல்லையோ இன்று அது வளர்ந்திருக்கின்றது. இது யாரால் வகுக்கப்பட்டது? எம்மால்தான். எமக்குள் இருக்கும் வேற்றுமைகளை வளர்த்தது யார்? மூதாதையர் எமக்கு இட்டுச்சென்ற வழிமுறைகள்தான்.

இவைகள் மாற்றப்படவேண்டும் என்கின்றேன்.

உயர்வுதாழ்வு எப்படிநண்பரே பார்த்துக்கொள்வீர்? ஜாதிகளின் அடிப்படையிலா?

நண்பரே! ஏட்டில் பேச்சில் காண்கின்றோம். எல்லோரையும் குறையாகக் கொள்கின்றோம். அப்படியாயின் நல்லவைகளைத் தேடிப்போகக்கூடாதா? அல்லது இந்தத் தமிழினம் அழியட்டும் என்ற நோக்கமா? அல்லது நாம் இங்கு வசதியாகத்தானே வாழ்கின்றோம். எமக்கென்ன அவனவன் தன் பிரச்சனையில் இருக்கட்டும். என்ற மனப்பாங்கைத்தானே வளர்க்கின்றோம்? அப்படியாயின் எமக்கு விடுதலை ஏன்? மொழி ஏன்? தொடர்ந்து எல்லாவற்றையும் கொச்சைப்படுத்துவோம் என்று நினைக்கிறீங்களா?

காலம் காலமாய் எமக்குள் இருண்டுகிடக்கும் தெளிவற்ற சிந்தனைகளை மறப்போம். சராசரிமனிதராய் நாம் ஒன்று சேர்வோம்.

நண்பரே! மதம்பற்றியும் தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள்.

நான் மதங்களுக்கு எதிரானவன் அல்ல என்பதைத் தாங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். கடவுளை வணங்கும் வழிமுறைகள் வித்தியாசப்பட்டிருக்கலாம். எல்லாக்கடவுளும் எல்லா மதநூல்களும் நல்லவைகளைத்தான் போதிக்கின்றன. அல்லா என்கின்றபோதும் அல்லேலுயா என்கின்றபோதும் அரோகரா என்கின்ற போதும் கடவுள் ஒன்றே என்பதே என்கருத்து. ஆனால் இன்னுமொரு மதத்திலிருந்து வேறொரு மதத்திற்கு மந்திகள்போன்று தாவுகின்றார்களே அது எப்படிச் சாத்தியமாகும். அத்தோடு தாங்கள் வணங்கிய கடவுள்களையெல்லாம் பிறமதம் தழுவியவுடன் பழிக்கின்றார்களே இது எப்படி? மதம் அன்பைப் போதிப்பது. ஆனால் நடப்பது என்ன? மதத்தின்பெயரால் தங்கள் சுயலாபங்களை ஈட்டிக்கொள்ளும் எம்மவர்களுக்கு என்ன செய்யமுடியும்? தன் இஷ்டப்படி மதத்தைப் போதிக்கின்றார்களே இவர்கள் யார்? மதம் மனிதனை நல்வழிக்குத்தான் கொண்டுசெல்லவேண்டுமே தவிர வன்முறைகளுக்காய் அல்ல.

நண்பரே! பெண்ணின் நிலையில் மாற்றம் தெரியவில்லை என்ற என்கருத்துக்கு

தங்களிடமே பதில் உண்டு.

"பெண்ணைப் பெண்ணாக இருக்கவிட்டு அவளுக்குரிய உரிமைகளைக் கொடுக்கவேண்டும்.!"

நன்று நண்பரே! இதைத்தானே நானும் சொல்கிறேன். பெண்ணைப் பெண்ணாக இருக்கவிடுங்கள். அவர்களைப் பேதைகளாக்காதீர்கள். நான்கு சுவர்களுக்குள் வாழ்வதல்ல வாழ்க்கை. நாலும் தெரிவதுதான் வாழ்க்கை. சமுதாயத்தில் அவளுக்குள்ள உரிமைகளைக் கொடுங்கள். அதற்காக அவளை ஆணாக மாற்றி மந்திரஜாலம்காட்டச் சொல்லவில்லை. சமுதாயத்தில் அவளும் ஒரு பங்கு. பெண் பெண்தான். இதை யார்மறுத்தது? பெண் காரணமாய் இருந்ததினால்தான் நானும் நீங்களும் எல்லோரும் பிறந்திருக்கின்றோம். எனவே பெண்ணின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும். நான் மனிதசமுதாயம் என்று எழுதியபோதும் அது எமது தமிழ்ச் சமூகத்தில் இருக்கும் குறைகள்தான். தாங்கள் ஆவேசம்கொண்டு சிலவற்றை எழுதியிருக்கிறீர்கள்.உங்கள் கோபங்கள் நியாயம் எனக்கொண்டாலும் தங்கள் அணுகுமுறைகளில் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. இவைகள்தாம் எம்மிலிருந்து விலகவேண்டும். நண்பரே! ஆண்கள் — பெண்களை எதிரிகளாக்கி அவர்களை விலங்கினமாக்குவதாக தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். என்வேலை அதுவல்ல. மனிதனும் ஒரு கூட்டமைப்புத்தான். அவன் ஏதோ தனியாகவாழலாம் என்று கூறிக்கொள்ளலாம். ஆனால் அவனும் ஒரு கூட்டமைப்புக்குள்தான் வாழ்கின்றான்.

தாய் — தந்தை, அண்ணன் — தம்பி, அக்கா் — தங்கை, இப்படி உறவுகள் தொடர்வதில்லையா? அவர்களை எப்படிப் பிரிவுகளாக்க முடியும்? அவரவர்கள் தங்கள் அறியாமையிலிருந்து விடுபட்டால் எதிர்ப்பு ஏன்? எதிரி யார்? நானும் நீங்களும் எதிரியா? இல்லை! ஆனால் நம்எண்ணங்கள்முரண்பட்டு நிற்கின்றன. எண்ணங்களால் ஒன்றுபட்டால் பிரிவினை இல்லை.

நண்பரே! சீதனமின்றி ஒரு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டு ஓரிரு வருடங்களின்பின் சீதனம்வேண்டுமென்று அடித்துத்துன்புறுத்தி தாய்வீட்டிற்கே அனுப்பிய சம்பவங்களை நாங்கள் அறிந்துகொண்டுதானே இருக்கின்றோம். இவ்வாறான பேதங்கள்ஒழியவேண்டாமோ? அன்றி நாமும் மனம் போனபோக்கில் வாழத்தான்வேண்டுமோ? இப்படியான செய்கைகள் இழிநிலை இல்லையா? ஒரு பெண் ஒதுங்கி இருந்தால் நாம்கொடுக்கும் பட்டங்கள் என்ன? இதுவா நாம் பெண்ணை பெண்ணாக வாழவிடும் நிலை? இவைகளை மாற்றும் எண்ணம் யாருக்கு வருகின்றது?

நண்பரே! நாம் யார்? நமக்கென்றுள்ள கடமைகள் என்ன?

ஏதோ நாம் புலம்பெயர்ந்து வந்துவிட்டோம் என்பதற்காக எம்மை மறந்து நாம் வாழவேண்டும் அல்லது நாம் இங்கு வந்துவிட்டோம் நமக்கென்ன என்ற நிலைப்பாடா? தான்தோன்றித்தனமாய் வாழவேண்டும். அப்படித்தானே? பாதிக்கப்பட்டோர்தான் போராடவேண்டும்என்கிறீர்கள்.யார் பாதிக்கப்படுகின்றார்கள்? பாதிப்புக்கள் நடக்கட்டும். நாம் பார்வையாளர்களாக இருந்திடுவோம் என்கின்றீர்களா? பார்த்தீர்களா இதிலும் எம்மை நாம் பிரித்துப்பார்க்கின்றோம். எங்கே யார் போராடவேண்டும் என்று நமக்குள்ள பிரிவை வளர்க்கின்றோம். இப்படியான ஊமைத்தனங்கள் மறையவேண்டும் என்று சொல்கின்றேன்.

நான் 'பெண்' என்ற தலைப்பில்தான் எழுதினேன். பெண் நடமாடும்ஜீவன் அவள் சடப்பொருள்அல்ல. அவளது எண்ணங்களை ஊமையாக்கிவிடக்கூடாது. அவளையும் சரியானமுறையில் நடமாடவிடவேண்டும் என்ற பட்சத்தில் இதைக் குறிப்பிட்டேன். தாங்கள்தானே ஆடு மாடு என்று விலங்கினமாயப் பிரித்துவிட்டீர்.

தங்களின் கருத்துப்படி பகுத்தறிவுள்ள ஆசா பாசங்களை உள்ளடக்கியவள்தான் பெண். ஆனால் அவளை அஃறிணைத்தனமாய் நடாத்தமுடியுமா?பகுத்தறிவுள்ள பெண்களுக்கு நாம் கொடுக்கும் சலுகைகள்தான் என்ன? பெண் தனக்குரிய வரம்புகளிலிருந்து மீறக்கூடாதுதான்.ஆனால் ஆணாதிக்கம் பெண்களுக்கென்று நியாயமற்ற வரம்புகளைப் போடுகின்றார்களே அந்த வரம்புகளிலிருந்து விடுபட வேண்டும். அதற்காக குடும்பத்திலிருந்து பிரிவதாகவோ பிரிப்பதாகவோ அர்த்தம் அல்ல. பெண்களை ஆண்கள் அடக்க முற்படுகின்றனரே எந்த வகையில் நியாயம்.

நண்பரே!

நீங்கள் சீதனம்என்பது பெரும்பிரச்சினையாக உள்ளது எனக் குறிப்பிட்டிருக்கும் வேளையில் சீதனம் வாங்கலாம் என்று மறைமுகமாகவும் சொல்கின்றீர்கள். பூனைக்கு மணிகட்டுவது யார்?

கேள்விகளோடுதான் நாம் நிற்கின்றோம். விடைதெரியாத கேள்விகள் எமக்குள் இருக்கத்தான் செய்கின்றன. அன்றி தெரிந்தும் தெரியாதவர்களாக இருக்கின்றோமா அதுவும் தெரியாது.

மொத்தத்தில் கேள்விகள் கேள்விகளாகத்தான் இருக்கின்றது. கேள்வியோடு நிற்பதால் மணியைக்கட்ட முடியாமல் நிற்கின்றோம். சீதனத்தை ஒழிப்பதற்கு இன்றைய இளைஞராவது முன்வரலாம் அல்லவா?

நண்பரே! ஒரு குடும்ப நிலையை எழுதினீர்கள். தியாகத் திருமணம் என்றும் அழைத்தீர்கள். இந்நிகழ்வுகள் அவரவர் மனநிலைகளையும் குடும்ப நிலைகளையும்பொறுத்தது.அதற்கு நீங்கள் முட்டுக்கட்டையாகநிற்கவேண்டாம்.

நண்பரே! எல்லாமே நிச்சயிக்கப்பட்டு சீதனத்தினால் நின்றுபோன திருமணங்கள் எத்தனையோ நீங்களும் அறிந்திருப்பீர்கள். இது தொடர வேண்டுமா?

சரி தாங்கள் கூறுவதைப் போன்று பத்துச் சகோதரிகளே உண்டு என்று வைப்போம். வசதிகள் வாய்ப்புக்கள் இருந்ததனால் நல்லவரன்களைப் பார்க்க முடிந்தது.திருமணத்தை நடத்தலாம். அதேவேளை பணமில்லாத சந்தர்ப்பத்தில் இந்தப் பத்துச்சகோதரிகளும் என்ன செய்வார்கள்? பணமில்லாத ஒரு காரணத்தினால் அவர்களின் வாழ்வு மறுக்கப்படுகின்றதே...இது எப்படி? இதற்கு எது முட்டுக்கட்டை? நீங்கள் கூறுவதைப்பார்த்தால் வசதி படைத்தவர்கள்தான் வாழவேண்டும்.அப்படித்தானே?வசதிகொண்டவர்கள் ஏன் வசதியில்லாதவர்களை வாழவைக்கக் கூடாது? நண்பரே! இது தனிமனிதனால் தீர்த்துவைக்கக்கூடிய பிரச்சனையல்ல என்பது எனக்கும் தெரியும். எல்லோர் மனங்களிலும் தானாய் வரவேண்டும். இதையும் தாங்கள் விரும்பவில்லையோ?

நண்பரே! நடைமுறையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவகையான பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கின்றன. தாங்கள் கூறியபடியே சிலர் சுயநலம்கொண்டு வாழ்கின்றார்கள்தான். அதற்காக அவர்களைப் பின்பற்றி நாம் வாழமுடியுமா?

நண்பரே!தங்களது கோபங்கள் நியாயமானதுதான். இவர்களைத் தட்டிக்கேட்கும் உரிமை பலருக்கு இல்லைத்தான். அதனால் விதி என்று இருந்துவிட முடியுமா?

நண்பரே!சமுதாயத்தில் சரிபாதி பெண்கள்என்று எழுதிவிட்டு மனித உரிமைகள் இல்லாத நாங்கள் கேவலம் பெண்ணின் உரிமைக்காய்ப் போராடுவதா? என்று கேட்கின்றீரே. எந்தவகையில் நியாயம்? இருக்கின்ற உரிமைகளை இழந்து கொண்டிருக்கின்றோம். அதுவா நியாயம்? உரிமைகளே இன்றிக் கேவலப்பட வேண்டும் என்று கருதுகிறீரா? சிந்தனையுள்ள தாங்கள் இப்படி எழுதலாமா?

உரிமைகளைப்பெற வழிசொல்வதைவிட்டுவிட்டு பெண் உரிமை கேவலம் என்று தள்ளிவிட்டு நாம் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறோம்.
நண்பரே!நமக்கு என்று நாடு வேண்டும்.நம் சிந்தனைகள் ஒன்றுபடவேண்டும். மனித நேயத்தை வளர்ப்போம். அதற்காய் நாம் ஒன்றுபடுவோம்.

(கட்டுரைகள் இரண்டும் கருத்துக்கள் மாறாமல் சுருக்கப்பட்டுள்ளன. விமர்சிக்கும் வாசகர்கள் பூவரசு இதழின் ஓரிரண்டு பக்கங்களுக்குள் அடங்கத் தக்கதாகத் தங்கள்கட்டுரைகளை எழுதக் கோருகிறோம்.

— ஆசிரியர்)

---

அடுத்த இதழில் —
எஸ்.ஆர்.நிஸ்தார் எழுதிய 'நாளைக்கு நாங்கள்' கட்டுரை தொடர்பாக இராஜன் முருகவேல் எழுதிய விமர்சனமும் படைப்பாளர் பதிலும்.

---

# எழுதுங்கள்!

***பூவரசுக்கென அனுப்பப்படும் உங்கள் ஆக்கங்கள் யாவும்***
***மாதத்தின் நடுப்பகுதிக்குள் (15ம்திகதிக்கு முன்பதாக)***
***அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.***
***ஆக்கங்களை அனுப்பும் போது தயவுசெய்து உங்கள் முழுப்பெயர், முகவரி***
***என்பனவற்றை தவறாது குறிப்பிடுங்கள்.***
***பிரசுரிக்கஇயலாத பட்சத்தில் அவைகள் உங்களதுமுகவரிக்கு உடனே***
***திருப்பி அனுப்பி வைக்கப்படும்.***
***குறிப்பிட்ட மாதத்துக்குள்***
***உங்கள் ஆக்கங்கள் உங்களுக்குத் திரும்பிவராவிடின் அவைகள்***
***பூவரசில் பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை***
***ஊகித்துக்கொள்ளுங்கள்.***
***காலக்கிரமத்தில் அவைகள் பிரசுரமாகும்.***
***பூவரசு தொடர்ந்து தரமான படைப்புக்களைப் பிரசுரிப்பதற்கும் தரமாக***
***வெளிவருவதற்கும்***
***உங்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது.***
***இது உங்கள் பூவரசு.***
***இதன் வளர்ச்சி உங்கள் வளர்ச்சி.***
***எழுதுங்கள்!***

# செய்தி மடல்

செப்டம்பர் 1995.

☐ வடபகுதி கடற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதாக சிறிலங்கா கடற்படையினர் தெரிவித்துள்ளனர். 144 பிரயாணிகளுடன் கப்பல் ஒன்றைக் கடத்தியதையடுத்து காவலுக்கு வந்த இரண்டு அதிவேக பீரங்கிப் படகுகள் கடலில் சிதறடிக்கப்பட்டன.

கடத்தப்பட்ட பிரயாணிகள் யாழ்ப்பாணத்தில் விடுதலை செய்யப்பட்டு செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.கடற்பெண்புலிகள் 'ஐரிஸ் மோனா' என்ற இந்தக்கப்பலைக் கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கப்பலும் செஞ்சிலுவைச்சங்கத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

☐ கிழக்குமாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பரவலான தாக்குதலை மேற்கொண்டு வருவதாக சிறிலங்கா இராணுவம் அறிவித்துள்ளது. அம்பாறை, மட்டக்களப்பு, திருக்கோணமலை, ஆகிய மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் உக்கிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

☐ சிறிலங்கா இராணுவம் பலத்தஉயிரிழப்புக்களுடனும்,ஆயுத இழப்புக்களுடனும் பின்வாங்கிக்கொண்டிருக்கின்றன. இராணுவமுகாம்கள் தொடர்ச்சியாக மூடப்பட்டு வருகின்றன. இராணுவம் பின்வாங்கிய இடங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் தமதுகட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளதாகவும், அவர்கள் அப்பகுதிகளில் தமது நிர்வாகத்தை நடாத்துவதாகவும் சிறிலங்கா இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

☐ வடபகுதி நிலைமைகளை ஐ.நா.சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக ஐ.நா.அதிகாரி திரு ரோலன்தாட்சர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். வடபகுதிக்கு நேரில்சென்று நிலைமைகளை பார்வையிட்டதுடன் அரசாங்க உயர் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

☐ யாழ் குடாநாட்டில் என்றுமில்லாதவாறு பெரும் உணவுத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. அத்துடன் கிடைக்கக்கூடிய உணவுப்பொருட்களின் விலையும் பன்மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் வடபகுதி மக்கள் மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

தேங்காய் எண்ணெய் ஒரு போத்தல் 200 ரூபா.சீனி ஒரு கிலோ 50 ரூபா. தீப்பெட்டி 3.50, ஒரு போத்தல் மண்ணெண்ணை 100 ரூபா.

பால்மா வகைகள் அறவேகிடையாது. அகதிகளுக்கு இரண்டுமாதங்களுக்கு மேலாக உலர்உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லையாம் குடாநாட்டின் நிலை இது.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களுடன் இரண்டு கப்பல்கள் வடபகுதிக்குப் புறப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

□ சீதனத் தடைச்சட்டம் செப்படம்பர் மாதம்முதல் தமிழீழத்தில் அமுலுக்கு வந்துள்ளது.இதனைத் தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் அறிவித்துள்ளனர். சீதனம்வாங்குவதும் கொடுப்பதும் பாரதூரமான குற்றமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

□ கப்பலில் புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு பயணிகளை ஏற்றிச்சென்ற கப்பல் அங்கு பயணிகளை இறக்காமலேயே கொழும்பு திரும்பியுள்ளது.

□ கொழும்பில் புலி என்ற சந்தேகத்தின்பேரில் கைதான 'ராவன் ஜவான்' என்ற பிரெஞ்சுப்பிரஜை கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டார். கொழும்பு கோட்டை நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டதின் பின்னரே இவர் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டார்.

□ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம் ஒன்று 8 ஆயிரம் அடி உயரத்திலிருந்து மர்மமானமுறையில் தாக்கப்பட்டு கடலினுள் வீழ்ந்தது.இதில் பிரயாணம் செய்த 68 இராணுவத்தினர், இரண்டு பொலிஸார், 5 விமானப்படையினர், விமானி ராஜசிங்கம் பாக்கியநாதன் ஆகியோர் பலியாகியுள்ளனர்.

□ சிறிலங்கா விமானப்படை மூன்று மாதங்களுக்கு முன்பு AN32 ரகத்தைச்சேர்ந்த மூன்றுவிமானங்களைக் கொள்வனவு செய்தது. உக்கரெய்ன் நாட்டிலிருந்து 4.5மில்லியன் டொலர்களுக்கு இந்தவிமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவ்விமானங்களில் ஏவுகணை எதிர்ப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

□ இந்த விமானம் எப்படித்தாக்கப்பட்டது என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதலுக்கு பின்னணியில் இருக்கலாம் என சிறிலங்கா அரசு சந்தேகிக்கின்றது.

□ 'முன்னோக்கிப்பாய்தல்' 'டிராகன் பயர்' ஆகிய பெயர்களை வைத்துத் தாக்குதல் நடாத்திய சிறிலங்கா இராணுவத்தினர் 'கைகுலுக்கல் 11' என்ற பெயரில் புதியதாக்குதல் ஒன்றை தமிழீழமக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டது. இருப்பினும் போர் எந்த ரூபத்தில் வந்தாலும் அதனை எதிர்க்கத் தயாராக இருக்கும் தமிழீழவிடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடாத்தி சிறிலங்கா இராணுவத்தை விரட்டியடித்தனர்.

□ பலாலி முகாம்மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ச்சியான ஷெல்

தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பலாலி விமான ஓடு பாதை சேதமடைந்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். சில இராணுவத்தினர் பலியாகியதுடன் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

☐ தமிழீழ விடுதலையில் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க அனைத்து தமிழ்மக்களும் பங்களிப்புச் செய்யவேண்டும் என தமிழீழத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அங்கு வீட்டுக்குவீடு நிதிசேகரிக்கப்பட்டு வருகின்றது. வெளிநாடுகளிலும் இது தொடர்பான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிக்கிளைவிடுத்துள்ள வேண்டுகோளில் புலம்பெயர்ந்துவாழும் தமிழ்மக்கள் இக்கால கட்டத்தின் தேவையை உணர்ந்து பாதுகாப்பைத் துரிதப்படுத்த வேண்டுமெனக் கேட்டுள்ளது.

☐ நீர்கூட அருந்தாமல் தமிழர்க்காக மரணித்த தியாகி திலீபனின் 8ம் ஆண்டு நினைவுகள் ஜேர்மனி எசன் நகரில் எழுச்சி விழாவாக 16.09.95 சனியன்று நடைபெற்றது.காலையில் பேச்சு, கவிதை,கட்டுரைப் போட்டிகளும், மாலையில் அஞ்சலிக்கும் கலை மலர்களும் இடம்பெற்றன. கலை பண்பாட்டுக் கழகம் நிகழ்ச்சிகளைத்தயாரித்து வழங்கியது.இதில் திரு கண்ணனின் தாளவாத்திய சோலோக் கச்சேரி மிகச் சிறப்பாக அமைந்தது.

☐ செப்டம்பர் மாதம் 30ம் திகதி செஞ்சோலை அறிவுச்சோலை கலைமாலை நிகழ்ச்சி பீலபெல்ட்நகரில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.மேலும் இந்நிகழ்ச்சி பெர்லின், சார்லண்ட் ஆகிய பகுதிகளிலும் நடைபெறவுள்ளன.

☐ தமிழர்கள் திட்டமிட்ட மர்மமானமுறையில் கொலைசெய்யபபட்டு வருகின்றனர்.கொழும்பு உட்பட பலபகுதிகளிலிருந்து தமிழர்கள் திடீர் திடீர் என காணாமல் போகின்றனர். பின்பு அவர்கள் உருத்தெரியாத சடலங்களாக வாவிகளில் மிதக்கின்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. இது சிறிலங்கா அரச படைகளின் கைவரிசையாக இருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

☐ சென்னையிலுள்ள சிறிலங்காத்தூதரகத்தில் அதிகாலைவேளை இரண்டு குண்டுகள் வெடித்துள்ளன. இதில் எவரும் பாதிக்கப்படவில்லை.அதற்குத் தமிழ்நாடு விடுதலைப்படை உரிமை கோரியுள்ளது.இது தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

☐ பிரான்ஸ் பாதுகாப்புப்படையினர் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். பல இடங்களிலும் அடிக்கடி குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடைபெறுவதையடுத்தே இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பிரான்ஸ் விமானமொன்று அண்மையில் கடத்தப்பட்டது. பிரான்ஸ் மேற்கொள்ளும் அணுஆயுதப் பரிசோதனை முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாவே இவை நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

☐ பஞ்சாப் மாநிலத் தலைநகர் சண்டிகாரில் இடம்பெற்ற கார் குண்டு வெடிப்பில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பியாந்சிங் கொலைசெய்யப்பட்டார். அவருடன் அவரின் பன்னிரண்டு உதவியாளர்களும் கொலைசெய்யப்பட்டனர். மேலும் 23 பேர் காயமடைந்தனர்.

□ பாலஸ்தீனமக்கள் தமது பகுதிகளில் சுதந்திரமாக நிம்மதியாக வாழ புதிய ஒப்பந்தமொன்றை இஸ்ரேலுடன் செய்துகொண்டதாக பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் கூறினார். இந்த ஒப்பந்தம் அமரிக்க அதிபர் திரு கிளின்டன் முன் கைச்சாத்தாகியது.

□ வடமராட்சி நாகர் கோவில் மகாவித்தியாலயம் உட்பட சில பகுதிகளில் சிறிலங்கா விமானப்படை விமானக் குண்டுவீச்சு, தொலைதூர எறிகணை ஆகிய தாக்குதல்களைமேற்கொண்டனர்.இதனால் மாணவர்கள்உட்பட நூறு பேருக்கும்மேல் கொல்லப்பட்டனர். 150ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மத்தியானவேளையில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

□ காங்கேசன்துறை கடற்பரப்பில் கடற்கரும்புலிகள் புகுந்து தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலில் சிறிலங்கா கடற்படையின் அதிவேக பீரங்கிப் படகொன்று முற்றாக மூழ்கடிக்கப்பட்டது. நான்கு மணிநேரம் நடைபெற்ற இக்கடற்சமரில் கடற்புலிகள் 20 மி.மீ. ஒலிகன் பீரங்கிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவை முன்னர் சிறிலங்கா கடற்படையினரிடம் கைப்பற்றப்பட்டவை. இச்சமரில் 'லங்கா முடித்த' என்ற சிறிலங்கா கப்பலும் பலத்த சேதத்துக்குள்ளானது.

□ சிறிலங்கா அரசு பத்திரிகை தணிக்கையை அமுல்படுத்தியுள்ளது. இனிமேல் அங்கு செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்படும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

□ புதுடில்லியில் விநாயகர் விக்கிரகங்கள் பால் அருந்தியதையடுத்து உலகடங்கிலுமுள்ள விநாயகர்விக்கிரகங்கள் மாத்திரமன்றி ஏனைய இந்துமத விக்கிரகங்களும் பால் அருந்துகின்றன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து மனம்மாறிச்சென்ற சிலர் மீண்டும் இந்துமதத்திற்குத் திரும்பியுள்ளனர் என்றும் அதே செய்திகள் தெரிவிக்கின்றன.

— வீ.ஆர்.வீ.

---

# வாசகர்களுக்கான சிறப்புப்போட்டி!

**இந்த ஐந்தாண்டுப் பருவம்வரை**
**பூவரசுமீது அக்கறைகாட்டிவந்திருக்கும் வாசகர்கள்**
**அதன் குறைநிறைகளை மனந்திறந்து**
**ஒரு கட்டுரைவடிவத்தில் அல்லது**
**கவிதைவடிவத்தில் எழுதலாம்!**
**எழுதப்படும் ஆக்கத்துக்கு**
**'பூவரசுபற்றி நான்...!' என்னும் தலைப்பிடுங்கள்!**
**தேர்ந்தெடுக்கப்படும் 3 கட்டுரைகள்**
**சிறப்புப்பரிசுகளைப்பெறும்.**

Auch Watscheln will gelernt sein: Die Schüler der Grundschule am Pfälzer Weg proben eifrig für die Aufführung ihres Theaterstücks. Foto: Perrey.

Universitäten Bremen und Oldenburg.



அன்பின் தமிழ்ப்பெருங்குடி மக்களே!

நீங்கள்—
சைவசமயியா? கிறித்தவரா?
இசுலாமியரா?
யாராயிருந்தாலும்
வாசிக்கவேண்டிய
சமயச்சரித்திரநூல்!
சமயச்சந்தர்ப்ப வாதங்களை
அகற்றும் ஆய்வுநூல்!

**சைவசமயமும்**
**சர்வமத சமரசமும்.**


**வெளிவந்துவிட்டது!**

சமய ஒருமைப்பாடோங்க — அன்பு செழிக்க —
அனைவரும் படிக்க வேண்டிய அரியநூல்!
நூலைப்பெறவிரும்புவோர் தபாற்செலவுட்பட 8DMகளுக்கான முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.!


முகவரி.—
S.Kamalanathan,
Hassel Riede-9, 30900 Wedemark, Germany.



வெளிவந்துவிட்டது...
கவிஞர் வி.கந்தவனம்
அவர்களின் ...
"எழுத்தாளன்"



" இலக்கியம் என்பது ஓர் உன்னத கலை. இந்தக் கலையின் இயல்பை விளங்கிக்கொள்வதற்கு கலை என்றால் என்ன என்பதை அறியவேண்டியது அவசியமாகும்." - கவிஞர் கந்தவனம்
(வானொலிப் பேச்சிலிருந்து)

எழுத்தாளன்
வெற்றிமணி வெளியீடு

VETTIMANY
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

Am Hilgenhaus 38
58511 Lüdenscheid
Germany

Tel/Fax:
02351/458862

Stadt-
Bibliothek
Bremen

**வாசகர்களை வரவேற்கிறது~**
பிறேமன் பொதுநூலகத் தமிழ்ப்பிரிவு!

**இப்பொழுது**
**பிறேமன் பொதுநூலகத் தமிழ்ப்பிரிவில்**
**மேலும் பல புதிய தமிழ்நூல்கள்....**
**உங்களுக்காகக் காத்திருக்கின்றன!**

Walliser Straße 125,
Osterholz bibliothek,
புதியமுறையில் திருத்தியமைக்கப்பட்டு
புதிய நூல்களுடன்
உங்களை வரவேற்கிறது!

**வாசிப்பதால் நாங்கள்**
**அதிகமாய் அறிகிறோம்**
**அதிகளவு நூல்கள்**
**நம் மொழிவாழ உதவும்!**